திராவிடநாடு

21—4—57 | வார வெளியீடு | விலை 0—2—6

முதலாளிக் கொள்கை

—[★]—

“ இன்று உலகத்தில் எங்கு பார்த்தாலும் துன்பங்களே தென்படுகின்றன. தொழிற்சாலைக்காரர்கள், வியாபாரிகள் மட்டும் சந்தை மந்தமாயிருப்பதைப்பற்றிக் குறைசொல்லவில்லை. விவசாயி, தொழிலாளிகளும்கூட அதை அனுபவிக்கிறார்கள். தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்களில் தொழிலாளர்களின் நிலைமையைச் சொல்ல வேண்டுவதில்லை. ஐரோப்பா, அமெரிக்காவின் தொழில் மிகுந்த நாடுகளில் தங்கள் வயிற்றுப் பசியைக்கூடத் தீர்த்துக்கொள்ள முடியாத வேலையற்றவர்களின் எண்ணிக்கை கோடிக் கணக்கில் பெருகிக் கொண்டு வருகிறது. மனித சமுதாயத்திற்கு இவ்வளவு பெரிய எண்ணிக்கையுடைய வகுப்பிற்கு அதிகமான துன்பங்களை வைத்துச் சில மனிதர்கள் மட்டும் சுகமாயிருக்கும்படி செய்வது, எந்த நோக்கத்தோடு பார்த்தாலும் சரியென்று சொல்லமுடியாது.

ஒரு மனிதன் வேறு எந்தத் தகுதியும் அற்றவனாயிருந்தும், கேவலம் தனது முதலின் பலத்தினால் பொருள்களை உற்பத்தி செய்யும் விலையுயர்ந்த சாதனங்களைப்பெற்று, அதன்மூலம் ஏராளமான மக்களுடைய உழைப்பின் பெரும்பகுதியைத் தனது சொந்த லாபத்திற்காகவும், தனக்கு உதவி செய்யும் முதலைப் பெருக்குவதற்காகவும் உபயோகித்துப் பணம் சம்பாதிப்பதற்குச் சிறந்த வழி முதலாளிக் கொள்கை.”

— ராகுல் சாங்கிருத்தியாயன்.

அளவு கடந்த வெறி

[வெங்கடாசலம் M.A.,]

ஆங்கிலேயர் இந்திய உபகண்டத்தை ஒன்ருக்கி ஆளத் தொடங்குமுன் வடநாட்டோடு எந்த ஒப்புரவும் கொள்ளாத நாம்—பாசமோ நேசமோ எதையும் எந்த விதத்திலும் அவர்களோடு பெற்றிராத நாம்—இன்று அவர்கள் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள முயலுவதில் வியப்பொன்றுமில்லை. அதேபோலத்தான் நம்மை அடக்கி ஆள அவர்கள் ஏராளமான முறைகளைக் கையாளுவதிலும் ஆச்சரியம் ஏதுமில்லை? ஏகாதிபத்திய வெறி எளிதில் போகாதல்லவா!

செல்வம் அத்தனையையும் சுரண்டி தென்னகத்தை ஏழை நாடாக்குவதன் மூலம் பணிய வைத்துவிடலாம் என்று திட்டமிட்டுப் பணியாற்றுகின்றனர், வடவர்.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்தனர். பக்ரா நங்கல் பாரீர்—ஹீராகுட் பாரீர்—தாமோதர் திட்டம் காணீர் — தரணி போற்றும் எங்கள் மகத்துவம் உணர்வீர் என்கின்றனர். சிந்திரியிலும், சித்தரஞ்சனிலும் — ரூர்கேலாவிலும், பிலாய் ஆலையிலும் —வங்கத்து சணல் தொழிலிலும், பம்பாய், அகமதாபாத் பஞ்சாலைகளிலும் — ஐந்தாண்டுத் திட்டங்களின் பெயரால் கொட்டப்பட்டுள்ள பணம் ஏராளம். அரசாங்கத்தின் கைபடாத துறையே இல்லை —கருத்தினையும் கருவூலத்தையும் ஈர்க்காத தொழிலே இல்லை! என்ருலும் துறைமுக முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் ஏதும் இதுவரை எடுக்கப்படவில்லை! ஏன்? இந்தியாவிலுள்ள கடற்கரைப் பகுதியின் பெரும் பாகம் திராவிடத்தைச் சேர்ந்தது. அதற்கு வழங்கப்படும் நீதி என்ன?

நீர்ப்பாசனத் திட்டங்கள் அனைத்தும் வடக்கிலா என்று கேட்கப்பட்டதற்கு, என்ன செய்வது, கங்கை சிந்துவைப் போன்ற பெரிய ஆறுகள் தெற்கில் இல்லையே என்றனர். விவசாயக் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகள், ஆராய்ச்சிக் கூடங்கள் அனைத்தும் வடக்கிலா என்ரேம் நாம்; விவசாய முன்னேற்றமும், அணைக்கட்டுகளும் அங்குதானே நிறைவேற்றப்படுகின்றன, எனவே அங்குதான் அவை தேவை என்றது வடநாட்டு அரசு. இரயில் பாதைகள் அனைத்தும் வடநாட்டிலேயே போடுகிறீர்களே, தென்னகத்தில் ஏனில்லை என்றது திராவிடம். எப்படி இயலும், ஆலைகளும் அணைக்கட்டுகளும் உள்ள இடத்திற்குத்தானே அவை அவசியம், அங்குதானே அவை இலாபகரமாக இயங்க முடியும் என்றது ஏகாதிபத்திய அரசு. இந்தக் காரணங்கள் எதுவும்—மக்கள் கிடக்கட்டும — நம் மாநில அரசாங்கம்கூட ஒப்புக் கொள்ளுமளவுக்குத் துறைமுக முன்னேற்றத்தைப் பொறுத்த வரையில் காட்டப்பட முடியாது. பூமிக்கடியில் புதைந்துகிடக்கும் நிலக்கரியையும் இரும்பையும் மறைக்கலாம்—தங்கமும் மாங்கனீசும் வெட்டியெடுக்கப்படுவது தவிர்க்கப்படலாம்—யுரேனியமும் தோரியமும் மறக்கப்படலாம்—சோடா உப்பு தயாரித்தலும், செம்பு பித்தளைகளை வெட்டியெடுத்துப்பயன்படுத்தும் உரிமையும் மறுக்கப்படலாம்—திராவிடத்தின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்று அந்த மக்களேகூட உணராத வகையில்! துறைமுகங்களின் முன்னேற்றத்திற்குத் திட்டங்கள் தீட்டப்பட தடுப்பது என்ன?

இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலுமுள்ள பெரிய துறைமுகங்கள் கல்கத்தா, பம்பாய், சென்னை, விசாகப்பட்டினம், கண்ட்லா ஆகியவை. ஆண்டொன்றுக்கு 1500-டன்முதல் 10,000-டன்வரை ஏற்றுமதி இறக்குமதிகள் செய்யும் துறைமுகங்கள் 150. ஆண்டொன்றுக்கு 1500-டன்னுக்கும் குறைந்த அளவில் ஏற்றுமதி இறக்குமதிகள் செய்யும் துணைத் துறைமுகங்களின் தொகை 76. பெரியனவாகவுமில்லாமல் சிறியனவாகவுமில்லாமல் நடுத்தரத் துறைமுகங்களாக இருப்பவை 18. 1946-ல் அமைக்கப்பட்ட துறைமுக ஆலோசனைக் குழு "நாட்டில் பொருளியல் முன்னேற்றமும், போக்குவரத்துக்கான தேவையும் தோன்றுவதற்கு முன்னர், துறைமுக அமைப்பு வேலைகள் நடத்தப்படவேண்டும்" என்று தன் அறிக்கையில் வெளியிட்டது. இன்று பதவியிலிருக்கும் இதே காங்கிரஸ் தலைவர்கள் அன்று ஆகா, எனப் போற்றினர் அந்த அறிக்கையினை. என்ருலும் சுதந்திரம் பெற்ற பின்னர் அறிக்கை பின்பற்றப்படவில்லை. நடுத்தர, சிறிய துறைமுகங்கள் கண்காணிக்கப்படாமலும் சீர்திருத்தப்படாமலும் இருப்பதைக் கண்டித்து எழுதுகிறது அரசாங்கத்தின் மதிப்பீட்டுக் குழு. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய துறைமுகங்களைச் செப்பனிடுவதற்காகவும், நுண்ணியல் முறைகளை அவற்றில் புகுத்துவதற்காகவும் 61-கோடி ரூபாய் செலவிடப்படவேண்டும் எனக் கணக்கிடப்பட்டிருந்தது. நடுத்தர, சிறிய துறைமுகங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையோ 2.4 கோடிதான். செலவிடப்பட்ட தொகையோ ஒதுக்கப்பட்டதில் 40-சதவீதம் தான். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் அப்படியே! இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதிகளில் ஆறில் ஒரு பங்கு நடுத்தரத் துறைமுகங்களின் மூலமும், சிறியவற்றின மூலமும்தான் நடைபெறுகிறது. இருப்பினும் பெரிய துறைமுகங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையில் 1—16 பாகம்தான் இவற்றிற்கு ஒதுக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

அவர்களைக்கொண்டு

ர் 15] ஆண்டு சந்தா ரூ. 8 [21–4–57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 40

அவர்களைக்கொண்டு ஆயிரமாயிரம் புதுமைகளைப் புகுத்தலாம்! ஆனால், அதற்கு எங்கே வழி இருக்கிறது? — என்று வேதனையுடன், அறிக்கையொன்று வெளியிட்டிருக்கிறது, 'போர்டு' அறநிலையம்.

'போர்டு' எனும் மோடார் மன்னரின் பெருத்த நன்கொடையைக்கொண்டு உலக முழுதும் நல்ல காரியங்களுக்குப் பணம் செலவிடும் பணியிலீடுபட்டு வருகிறது இந்த அறநிலையம். கடந்த ஆறு ஆண்டுகளில் இந்நிலையம், இந்திய உபகண்டத்தில் 6½-கோடி ரூபாய்களைக் கிராம முன்னேற்றத்துக்கெனச் செலவிட்டிருக்கிறது. இவ்வளவு செலவிட்டும், தன்னால் எவ்வளவு காரியங்களைச் சாதிக்கமுடிந்தது என்பதுபற்றிக் கணக்கெடுக்கையில் மேற்கண்டவாறு கூறுகிறது.

இந்திய உபகண்டத்துக் கிராமங்களில் புதுமை மலர்வதென்பது எளிதல்ல — என்பதுதான், இந்நிலைய அறிக்கையின் சாரமாகும். ஏழ்மையும் அதைவிட மேலாக அறியாமையும் அரசோச்சும் கிராமங்களில், மக்களுக்கு உணர்த்தவேண்டிய விஷயங்கள் எவ்வளவோ உள்ளன. விவசாயம்பற்றியும், கூட்டுறவு முறைகள் குறித்தும். நாட்டின் நிலைமைகள் சம்பந்தமாகவும், இவையெல்லாவற்றிற்கும் மேலாக கல்வியின் மேன்மை குறித்தும் அவர்களுக்கு உணர்த்தவேண்டிய நிலை உள்ளது. அப்படி உணர்த்துவதற்கு பள்ளி ஆசிரியர்களே மிகமிகப் பயன்படத் தக்கவர்கள் என்கிறது, 'போர்டு' அறநிலையம்! அவர்களைக்கொண்டு ஆயிரமாயிரம் புதுமைகளைக் கிராமங்களில் புகுத்த இயலும்—என்று அறிவிக்கிறது!!

உண்மையில், நல்ல ஒரு ஆசிரியர் இருப்பாரானால், அந்தக் கிராமத்துக்கு அதைவிட வாய்ப்பு வேறேதுமில்லை. எழுத்தறிவிப்பவனே இறைவனாகும் என்ற பழமொழி, இன்னும் பொய்த்துவிடவில்லை, கிராமங்களில். பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப்படும் மதிப்பும் கவுரவமும் அலாதிதான்! அந்த ஆசிரியப் பெருந்தகைகள் முயன்றால், அறியாமை அகலவும், புதுமைகள் மலரவும் பல காரியங்களைச் செய்யலாம். ஆனால், அவர்களுக்கு வழி எங்கே உளது? — என்று கேட்கிறது, அமெரிக்க அறநிலையம். "ஆசிரியர்களுக்கு, தமது சொந்த வாழ்க்கையே ஒரு சுமையாக உளது. கிடைக்கும் குறைந்த சம்பளத்தைக் கொண்டு தமது பிரச்னைகளைச் சமாளிக்கவே நேரமில்லை அவர்களுக்கு. இந்நிலையில் எப்படி அவர்களை இதுபோன்ற பணிகளில் ஈடுபாடு கொள்ள இயலும்?" என்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இதனை, யாரும் மறுக்க இயலாது! ஊதியம் குறைவு என்பது மட்டுமல்ல, ஆங்காங்கே தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளில் பணிபுரிவோருக்குத் தமது வேலை நிரந்தரமானதுதானா என்கிற அச்சமும் திகிலும் அகன்றபாடில்லை— (இது சம்பந்தமாகக் கேரள கம்யூனிஸ்டு சர்க்கார் ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறதாம்! அதைப் பின்பற்றலாம், காங்கிரஸ் ஆட்சியும் செய்யுமோ, என்னவோ!!) — இந்நிலையில், ஏது அவர்களுக்கு வாழ்வில் நிம்மதி? நிம்மதியில்லாதபோது எந்தப் பணியில் ஈடுபட முடியும் அவர்களால்?

நல்ல ஊதியமும். உற்சாகமூட்டக் கூடிய வசதிகளையும் வழங்கி, இந்த ஆசிரியர்களை நல்ல **சமுதாயத்** தொண்டர்களாக்கலாம், அரசினர். அதனால் பல ஆசிரியர்களும், பள்ளிகளும் அதிகரிப்பது மட்டுமின்றி கிராமப் புறங்களில், பல புதுமைகளும் மலரச் செய்யலாம். ஆனால், அரசுக்கு இதுபோன்ற விஷயங்களில் கவனம் வருவதில்லை. வந்தாலும், புதுமைகளைப் போதிக்கச் செல்லும் ஆசிரியர்கள் தி. மு. க.வினராக இருப்பரோ என்று சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறது! சாதிபேத ஒழிப்பு — ஆண்டான் அடிமை பேதம்—இவைகளைப்பற்றிப் பேசாத அரசியல் கட்சிகளே கிடையாது; ஆயினும் யாராவது ஒரு ஆசிரியர் அதுபற்றிப் பேசிவிட்டால் அவர் ஒரு தி. மு. க. என்று கூறப்பட்டு உடனே அமைச்சர்கள் "ஆசிரியர்கள், அரசியலில் பங்கு கொள்ளக்கூடாது" என்று அலறவல்லவோ முற்பட்டுவிடுகின்றனர்? புதுமைகள், தி. மு. க,விலிருந்தால் என்ன செய்வது!!

இப்படி அச்சமும், அருவருப்பும் அதிகமிருக்கிற காரணத்தாலேயே யாரார் மூலம் நாட்டுப்புறங்களின் நலிவைப் போக்கிட இயலுமோ, அவர்களையெல்லாம் விட்டுவிட்டுப் புதுப் புதுத் தொண்டர்களைச் சிருஷ்டிப்பதிலும், பாரத் சேவாசமாஜம் போன்றவைகளைக் கொண்டு தமது கட்சி ஆட்களைப் பயன்படுத்துவதிலும், அக்கரைகாட்டுகிறது அரசு. இதனால் விளைந்த பலன்!! ஆறுகோடியைச் செலவிட்டும், கிராமப் பிரச்னைகள் அப்படியே உள்ளன என்று நாமல்ல —போர்டு ஸ்தாபனம், கூறுகிறது.

இப்படி, விருப்பு வெறுப்பற்ற வெளிநாட்டினரும் ஏனையோரும் கூறும் கருத்துரைகளைக் கேட்டு, அதன்படி நடப்பதே, அறிவுடைமையாளர் தம்செயல்எனலாம். ஆனால், கிராமப் புனரமைப்புக் குறித்து, இதோ ஒரு திட்டம் கிளம்பியுள்ளது டில்லியிலிருந்து. சமுதாய நலத்திட்ட அமைச்சர் எஸ். கே. டே என்பார் அறிவிக்கிறார், அதனை. ஒருகோடியே நாற்பது இலட்சம் கிராமத் தலைவர்களைத் 'தயாரிக்கப்போகிறார்'களாம்! இரண்டாவது ஐந்தாண்டுக் காலத்துக்குள் இத்தனை 'கிராமத் தலைவர்களை' உண்டுபண்ணப்போகிறார்களாம்!!

'இந்தத் திட்டத்துக்கு பணச் செலவு ஏதுமில்லை', என்கிற பரமானந்தத்தோடு துவங்கும் அந்த அறிக்கை சொல்லுகிறது, மூன்று நாட்களில் இதுபோன்ற தலைவர்களை உற்பத்திசெய்யப்போகிறதாம். குறிப்பிட்ட ஒரு கிராமத்தில், மரத்தடியிலோ அல்லது நிழல் கிடைத்த இடத்திலோ ஒவ்வொரு வட்டாரத்துக்கும் அந்தந்த வட்டாரத்திலுள்ள கிராமவாசிகளில் சிலரை வரச்சொல்லி-விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம், கிராமக் கைத்தொழில், சுகாதாரம், கல்வி, பஞ்சாயத்து, கூட்டுறவு, போக்குவரத்து (எல்லாம் மூன்றே நாட்களில்!!)-முதலியவைகளைப்பற்றி பயிற்சிதரப் போகிறார்களாம். நாலைந்து மைல் சுற்றளவுக்கு 'ஒரு காம்ப்' கூடுமாம். காலையில் கட்டுச் சாதத்தோடு வந்து மாலை வரையில் 'படித்து'விட்டு அவரவர்கள் செல்லலாம்!! இப்படி, மூன்று நாட்கள் அளிக்கப்படும் பயிற்சியால், மொத்தம் இந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு கோடி நாற்பது லட்சம் பேரைத் தயாரிக்கப்போகிறதாம்.

ஒவ்வொரு ஊரிலும் 'காம்ப்'களை நடத்திவிட்டு, இத்தனை பேரைத் தயாரித்துவிட்டோம் என்கிற பெருமையோடு எஸ். கே. டே. வரலாமே தவிர, மேற்குறிப்பிட்ட துறைகளில் உருவான பலன் ஏற்படவும், அது நிலைக்கவும், இயலுமா? கிராமவாசிகளின் பொருளாதார நிலை, அடிப்படைத் தொல்லைகள் ஒருபுறம் இருக்கட்டும், கண்டு கேட்டவைகளை அவர்கள் அனுசரிக்கிறார்களா என்று பார்ப்பது யார்? — விளக்கமேதுமில்லை, டேயின் அறிக்கையில்.

'போர்டு' அறநிலையத்தினர் கூறுவதுபோல, நிலையான புதுமைகள் மலரச்செய்ய ஆசிரியர்களைவிடச் சிறந்த ஆசான்கள் கிடைக்க மாட்டார்கள். அவர்களது வாழ்க்கைச் சுமையைக் குறைத்து, ஓய்வு நேரத்தில் இதுபோன்ற புதுமைகளை மலர்விப்பதில் நேரத்தைச் செலவிடும்படி செய்தால், மிகமிகப் பலன் விளையும்! உருவான நன்மைகளும் கிடைக்கக்கூடும். அதைவிட்டு, இப்படி, இடத்துக்கு இடம் மூன்றே மூன்று நாள் 'காம்ப்' கூட்டிவிடுவதால், என்ன ஏற்படும்? — இதுவும் ஒரு பிரச்சார வழியாகக் காங்கிரசுக்கும், நேரு சர்க்காருக்கும் அமையுமே ஒழிய, நிலையான நன்மை ஏதும் மலராது.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்டுள்ள தொகை 5-கோடி ரூபாய்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கனரகத் தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம் — வேலையில்லாத் திண்டாட்டம் நீங்குவதற்கான வழிவகைகள் செய்யப்படுகின்றன— போக்குவரத்துக்காக செலவிடப்படும் தொகை ஏராளம் — என்று கேட்பவர்களின் காதுகள் செவிடாகும்வரை பேசுகிறவர்கள் ஏன் இந்தப் பணியில் இறங்கவில்லை? இத்தகைய துறைமுகங்களிற் பெரும்பகுதி திராவிடத்தில் இருப்பதால்தானே!

போக்குவரத்து முன்னேற்றத்திற்கென ரூ. 1000-கோடிக்குமேல் இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்தும் — பெரிய துறைமுகங்களில் பொருள்கள் நிறையத் தங்கிவிடுவதால் ஏற்றுமதி இறக்குமதிகளில் அடிக்கடி காலதாமதம் ஏற்பட்டும் — அப்படிக் காலதாமதம் ஏற்படும் ஒவ்வொரு நாளிலும் ரூ. 4000லிருந்து ரூ. 5000-வரை நஷ்டம் ஏற்படுகிறது என்று மதிப்பிட்டுக் குழு எடுத்துக்காட்டியும்—விரிவடைந்திருக்கின்ற வெளிநாட்டு வாணிபம் முழுவதையும் பெரிய துறைமுகங்கள் மூலமே நடத்துவது இயலாது என்று எத்தனையோ அதிகாரிகளும், பொருளியல் நிபுணர்களும் எடுத்துக் கூறியும் —துறைமுக வளர்ச்சிகளில் மத்திய அரசாங்கம் கவனம் செலுத்தவில்லையென்றால், யானைப் பசிக்கு ஒரு கவளம் சோற்றுருண்டை போடுவதுபோல 5-கோடி ரூபாயை மட்டுமே ஒதுக்குகிறதென்றால் என்ன அர்த்தம்? மருமகளும் சாப்பிட வருவாளோ என்ற பயத்தால் சமைக்காமலே விட்டுவிடும் மாமியாரின் பண்புதான் நினைவிற்கு வருகிறது! என்றாலும் சில மணி நேரம் கழித்து, தனக்காகவாவது சமைத்துத்தானே தீரவேண்டும் இவள்.

எப்படியும் இந்தப் பணி துவக்கப்பட்டுத்தான் தீரவேண்டும் என்ற நிலை ஏற்பட்டவுடன் மற்றொரு சூழ்ச்சியினைக் கையாளத் திட்டமிட்டிருக்கிறது, மத்திய அரசாங்கம். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை மூலம் அந்த ஆசையையும் வெளிப்படுத்தியிருக்கிறது. இவ்வளவு குறைபாடுகளையும் எடுத்துரைத்த குழு என்ன முடிவுக்கு வந்திருக்க வேண்டும்? சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு துறைமுகங்கள்பற்றிய முழு அதிகாரமும் வழங்கப்பெற்றால் அவை வளர்ச்சியுறும் என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும்! குறைகளைக் களைந்திட அதிகார மாற்றம் தேவை என்றுதான் குழுவினரும் கருதுகின்றனர். என்றாலும் மத்திய அரசாங்கம்தான் முழுப் பொறுப்பையும் பெறவேண்டுமாம் — மாநில அரசாங்கங்களிடம் இருக்கின்ற குறைவான அதிகாரங்களும் பறிக்கப்பட வேண்டுமாம்! வேடிக்கையும் வேதனையும் ஊட்டத்தக்க முயற்சி! ஆசை, அளவுகடந்தது, வெட்கமும் அறியாதது என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு இது.

★

நான் ஒரு அடிமையாக இருக்க விரும்பேன். அதைப் போல் ஒரு எஜமானாயிருக்கவும் விரும்பவில்லை. ஜனநாயகத்தைப்பற்றி நான் கொண்டுள்ள அபிப்பிராயம் இதுவே. இந்தக் கருத்தில் மாறுபடுவதெல்லாம் ஜனநாயகமல்ல.

— ஆப்ரகாம் லிங்கன்.

காஞ்சீபுரம்

21—4—57

தம்பி !

தமிழகத்தின் தனிச்சிறப்பினை, இலக்கியமும், வெட்டுண்டும் சிதறுண்டும் கிடக்கும் நிலையில் மட்டுமே கிடைத்திடும் வரலாறும் காட்டும்போது, எனக்கு மன எழுச்சி உண்டாவது போலவே, எவருக்கும் உண்டாகத்தானே செய்யும். நாட்டுச் சிறப்புப்பற்றி அறிந்திடும்போது, அனைவரும் அகமகிழத்தான் செய்வர்—அந்த உணர்ச்சி, 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாக' அமைகிறது. பொல்லாத புலவர்கள், ஏனோ இவ்வளவு அழகுபட, உள்ளத்தில் உவகை பொங்கிடத்தக்க வகையில், நந்தம் நாடுபற்றிப் பாடினரோ, என்று திகைத்துக் கேட்டிட வேண்டி நேரிடுகிறது, இன்று நம் கண்முன் நெளியும் நிலைமைகளுடன், புலவர்கள் பாக்கள் மூலம் காட்டிடும் தமிழக நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்த்திடும்போது.

தமிழக வரலாறு, நம் தாயக வரலாறு என்ற முறையில் என் உள்ளத்தில் உவகையை உண்டாக்குவது இயற்கைதான் — ஆனால் அதற்கு அடுத்தபடியாக என் மனதுக்கு எழுச்சியைத் தரத்தக்கதாக, **மராட்டிய மண்டல வரலாறு** அமைகிறது. என்னென்ன வீரக் காதைகள்! எத்துணை எத்துணை தியாகங்கள்! ஏரோட்டியவன் எதிரியை விரட்டிட வாளேந்தியதும், தலை வாரிப் பூச்சூடி மகிழத்தக்க பருவத்தினள், குதிரை ஏறி மாற்றானைப் போரிட்டு விரட்டியதும், கீர்த்திக் கணவாயில் குருதி கொட்டியேனும் நாட்டை மீட்டிடக் கிளம்பிடும் ஆற்றல்படையினரின் அஞ்சா நெஞ்சமும், காணக் காண நெஞ்சு நெக்குருகும்.

மராட்டிய மண்டலம், அன்று அரசு பெற்று, அணியெனத் திகழ்ந்தது; இன்று அரசு இழந்து அல்லற்படுகிறது; எனினும், அந்த மக்கள் நாட்டுப்பற்றை இழந்தாரில்லை; தம் பண்டைப் பெருமையை மறந்தனரில்லை; மறவாதது மட்டுமல்ல, பெருமையை மீட்டிட முடியும் என்று உறுதிபூண்டு, இதுபோது பணியாற்றி வருகின்றனர்.

இந்த மாபெரும் எழுச்சியின் ஒரு சிறு கூறுதான், **சம்யுக்த மராட்டிய சமிதி** எனும் முயற்சி; இந்த முயற்சி, நம்பிக்கை தருவதாக அமைந்துவிட்டது! மராட்டிய மண்டலத்திலே, காங்கிரஸ் மேலிடம் இழைத்த அநீதியை எதிர்த்து, கொடுமைக்கு ஆளானவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, காங்கிரசுக்குத் தக்க பாடம் கற்பிக்க வேண்டும், என்பதற்காகவே அமைத்தனர் புதிய முகாம்—சம்யுக்த மராட்டிய **சமிதி.** வெவ்வேறு கட்சிகளை நடாத்திக்கொண்டு வருபவர்கள்—தத்தமக்கென்று தனிக் கொடியும் படையும் கொண்டுள்ளோர்-இந்த ஒரு நோக்கத்துக்காக, தமது ஆற்றலை தனித்தனியே செலவிட்டால் சிதறுண்டு போகும் என்பதற்காக, ஒரு தனி முகாம் அமைத்து; கூட்டுவலிவு காட்டிக் காங்கிரசை எதிர்த்தனர் — 135 — இடங்களில் 100-இடங்களில் வாகைசூடினர்.

★ படமும் பாடமும் (4)

இங்கு, அதுபோன்ற முயற்சி வெற்றிபெறவில்லை!

உள்ளதை மறைத்திடாமல்பேசுவது என்றால், இங்கு காங்கிரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும், போட்டி எத்துணை கடுமையோ, அதனினும் கடுமையாக, காங்கிரசுக்கு எதிர்ப்புக் கட்சிகளாக, உள்ளவைகளுக்குள் இருந்து வந்தன!

காங்கிரஸ் வெற்றி பெற்றால் கூடப் பரவாயில்லை, இந்தக் கழகம் வெற்றிபெறக் கூடாது-என்பதை மேடையிலேயே பேசிடச் சிலர் கூசவில்லை.

எது எந்த நாசமாகப் போனாலும் பரவாயில்லை, பார்ப்பானோ பாதகனோ, மொண்டியோ முடமோ கூனோ குருடோ, ஊர்க்குடி கெடுப்பவனோ ஊமையோ, கழுகோ வௌவாலோ,காட்டானோ காவாலியோ, எவன் வெற்றி பெற்றாலும், பரவாயில்லை, இந்த 'கண்ணீர்த் துளிகள்' மட்டும் வெற்றிபெறக் கூடாது—அதைக் காண நேரிடுமானால் எமக்கு உள்ளவை கண்களல்ல, புண்கள்!!-என்று பேசிடும் அளவுக்கு அநாகரிக அரசியல் படமெடுத்தாடிற்றே!!

மராட்டியத்திலே, உரிமைக்காக, அனைவரும் ஒன்றுபட்டு நின்று, காங்கிரசை எதிர்த்துப் போராடினர்—எனவே 135ல் 100 இடங்கள் வெற்றிபெற முடிந்தது.

இங்கு, நிலைமை வேறு; மராட்டியம் போல, இங்கு, காங்கிரசை எதிர்த்து நிற்கும் கட்சிகள், ஒன்றை ஒன்று ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற எண்ணம் கொள்ளாது, ஒன்றுக்கொன்று துணை நிற்கவேண்டும் என்ற திட்டத்தை அமுலாக்கி, கூட்டுச் சக்தியைக் காட்டி இருந்தால், காங்கிரசுக்கு இத்தனை 'அமோகமான' வெற்றி கிடைத்திருக்காது.

மொத்தத்தில், சென்னை மாநிலத்திலே, காங்கிரசுக்கட்சிக்குஆதரவாகத்தரப்பட்ட ஓட்டுகளைவிட,காங்கிரசுக்கட்சிக்கு எதிராகத் தரப்பட்ட ஓட்டுகளின் எண்ணிக்கையே அதிகம்.

தொகுதிகளைத் தனித்தனியே பார்க்கும்போது, பதறப்பதற, எதிர்க்கட்சிகள் 'பங்குச் சண்டை' போட்டுக்கொண்டதால் மட்டுமே காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றிருப்பதைக் காணலாம்!

எதிர்க்கட்சிகளுக்குள் ஒரு உடன்பாடு, ஒத்துழைப்புத் திட்டம், இருந்திருக்குமானால், காங்கிரசுக்குச் சரிவு, சரிக்கட்டமுடியாத அளவுக்கு ஏற்பட்டிருந்திருக்கும்.

எதிர்க்கட்சிகள், ஒன்றை ஒன்று மதிக்க மறுத்ததும், உடன்பாடு குறித்து உரையாடி முடிவு காணத் தகுந்த முறை, தக்க சமயத்தில் ஏற்படாமற் போனதும், காங்கிரசுக்கு 'அமோக' வெற்றிதேடிக் கொள்ள வழி தந்தது.

மக்கள் பேரில் குற்றம் கூறுவதற்கில்லை.

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை நாங்கள் வெறுக்கிறோம், எதிர்க்கிறோம், மீண்டும் அந்த எதேச்சாதிகாரத்தை அனுமதிக்க விரும்போம், என்று, மக்கள், தமது 'தீர்ப்பை' தெளிவுடன், துணிவுடன், அச்சம் தயைதாட்சணியத்துக்குக் கட்டுப்படாமல் அளித்துள்ளனர்; மக்கள் பேரில் குறை இல்லை—குற்றமத்தனையும் மக்களை நடத்திச்செல்வதாகக் கூறப்படும், தலைவர்களிடமே இருந்திருக்கிறது.

தம்பி! திருவையாறு தொகுதியில் காங்கிரஸ் கட்சியை ஆதரித்துக் கிடைத்த 'ஓட்டுகள' 19722; காங்கிரஸ் கட்சியை எதிர்த்து மக்கள் போட்டுள்ள ஓட்டுகள் 26138—என்றாலும் வெற்றி பெற்றவர், காங்கிரஸ் அபேட்சகராக நின்ற சுவாமிநாத மேற்கொண்டார் என்பவர்! இந்த விசித்திரத்துக்குக் காரணம் என்ன? காங்கிரசை எதிர்த்துத் திருவையாறு தொகுதி மக்கள் 26138-ஓட்டுகள் அளித்தனர் — ஆனால், அவை மொத்தமாக ஒருவருக்குப்போய்ச் சேரவில்லை, ஆளுக்குக் கொஞ்சமாகப் பலர் பிய்த்து எடுத்துக் கொண்டுவிட்டனர்.

பட்சிராஜன்	8270
சுயம்பிரகாசம்	8077
இராதாகிருஷ்ணன்	4648
இராமலிங்கம்	4096
திருவேங்கிடத்தான்ஐயங்கார்	1047

இப்படி, காங்கிரசுக்கு எதிர்ப்பான ஓட்டுகள் சிதறிப்போயுள்ளன! இவர்கள் அனைவரும் தோற்றனர்—மொத்தமாக 19722-ஓட்டுகளைத் திரட்டிக்கொள்ள முடிந்த மேற்கொண்டார்எனும்காங்கிரசுக் கட்சியார் வெற்றிபெற்றார்!

திருவையாறு தொகுதியிலே காங்கிரசு வெற்றிபெற்றது என்று விழாக் கொண்டாடி, காங்கிரசின் செல்வாக்கினைப் பாரீர் என்று சிந்து பாடுவர்! ஆனால், தொகுதி மக்களிலேயோ, 26138-பேர் காங்கிரசு கூடாது, ஆகாது என்று கருதுகிறார்கள்--19722 வாக்காளர் மட்டுமே, காங்கிரஸ் கட்சி வேண்டும் என்று தீர்ப்புக்கூறினர்.

26138-மக்கள், காங்கிரஸ் கட்சி கூடாது, ஆகாது என்று தீர்ப்பளித்தும், பலன் கிடைக்காமற் போனதற்குக் காரணம் என்ன?

ஆளுக்கு ஒரு துண்டு எடுத்துக்கொள்வோம், என்று கூறி பத்து ரூபா நோட்டை, ஐந்து பாகமாகக் கிழித்து, ஆளுக்கு ஒரு துண்டு எடுத்துக்கொண்டால், எப்படியோ, அப்படி ஆகிவிட்டது, இந்தச் சம்பவம்.

காங்கிரசு கூடாது, ஆகாது என்பதைக் குறித்திடும் தீர்ப்புச் சீட்டுகளை—'ஓட்டுகளை' — மக்கள் மொத்தமாக ஒருவரிடம் அளித்திருந்தால், காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றிருக்க முடியாது—திருவையாறு, காங்கிரஸ் கோட்டை என்று பேசிப் பெருமைப்பட முடியாது! ஆனால் காங்கிரசு கூடாது என்பதைக் குறித்திடும் தீர்பபுச் சீட்டுகளில் 8270-நமது கழகத் தோழர் பட்சிராஜனிடமும், 8077-சீட்டுகளை, காங்கிரஸ் சீர்திருத்தக் குழுவினருடன் கூடிக்கொண்ட சுயம்பிரகாசம் அவர்களிடமும் என்று இம்முறையில் ஐந்து தோழர்களிடம், ஆளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக, 26138-ஓட்டுகளைப் பிரித்துப் பிரித்துக் கொடுத்துவிட்டனர்—பத்து ரூபாய் நோட்டு கிழித்துக் கொடுக்கப்பட்டது—துண்டுகளாக்கப்பட்டன — பலன் இல்லாமற் போய்விட்டது.

திருவையாறு தொகுதியில் 26138-மக்கள் காங்கிரசை எதிர்த்து 'ஓட்டு' அளித்தும், காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்று விட்டதன் மர்மம், இதுதானே!

காங்கிரசை எதிர்த்து ஓட் அளிக்க வேண்டுமென்று முடிவு செய்த அந்த 26138-வாக்காளர்களும், தத்தமது அறிவு, ஆராய்ச்சி, தொடர்பு தோழமை, தெளிவு ஆகியவற்றுக்குத் தக்கபடி, காங்கிரசை வீழ்த்தக் கூடியவர் இவராகத்தான் இருக்க வேண்டும், இவருக்கு ஆதரவு

HOME-LAND

'திராவிடநாடு' விற்பனையாளர்களுக்கே 'HOME-LAND' விற்பனை உரிமையும் தரப்படும். 30—4—57க்குள், குறைந்தது முன்பணம் ரூ. 25-ம், 25-பிரதிகளுக்கு மேல் தேவைப்படுவோர் பிரதி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதமும் அதிகமாக அனுப்பிவைக்கவும்.

முன் பணம் கிடைத்ததும் ஏஜன்சி பாரம் அனுப்பிவைக்கப்படும்.

ரூபா 25-க்குக் குறைந்த முன்பணம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சென்னை, மதுரை, திருச்சி, கோயம்பத்தூர், சேலம் போன்ற பெரிய ஊர்களிலுள்ள நமது ஏஜண்டுகள் தனியாக விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்.

அளித்தால்தான் காங்கிரஸ் கட்சியை முறியடிக்க முடியும், என்று முடிவு செய்து, அதற்குத் தக்கபடி ஓட்டுகளைத் தந்தனர். இவ்வளவு 'அபேட்சகர்கள்' காங்கிரசை எதிர்க்கும்போது, காங்கிரசை எதிர்த்தொழிக்க எண்ணும் வாக்காளர்கள், குழப்பமடைவதும், அதன் பயனாக 'ஓட்டுகள்' சிதறுவதும்தானே நடக்கும்.

காங்கிரசை எதிர்த்த அத்தனை அபேட்சகர்களும், காங்கிரஸ்கட்சி கூடாது, ஆகாது, அதற்கு ஓட்டளிக்கக் கூடாது என்று முடிவு செய்துகொண்டுள்ள வாக்காளர்களைச் சந்தித்தபோது, காங்கிரஸ் கட்சியை வீழ்த்தும் ஆற்றல், காங்கிரஸ் கட்சியினால் ஏற்பட்டுவிட்ட கேடுபாடுகளைப் போக்கும் வலிவு எனக்கு உண்டு, எனக்குத்தான் உண்டு, காங்கிரசை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு உங்களிடம் ஓட்டு கேட்க வருகிறார்களே, மற்றவர்கள், அவர்களுக்கு அந்த ஆற்றலும் கிடையாது, வெற்றிபெறும் வாய்ப்பும் இல்லை; எனக்கு ஓட்டு அளித்தால் மட்டுமே காங்கிரசை வீழ்த்த முடியும்! என்று பேசியிருப்பர். வாக்காளர்கள் இதுபோல நாலாபக்கமும் பிடித்து இழுக்கப்பட்டதால், முடிவு நைந்துபோய்விட்டது.

"காங்கிரஸ் கட்சி கூடாது என்பதை ஒப்புக்கொள்கிறேன், ஆனால், காங்கிரசை வீழ்த்த, கழகத்தால் முடியாது, நம சுயம் பிரகாசம் தான் அதற்குச் சரியானவர் என்று 8077-வாக்காளர்களுக்குத் தோன்றியிருக்கிறது; இல்லை, இல்லை, என்ன இருந்தாலும், திராவிடபார்லிமெண்டரி கட்சி என்று சட்டசபையில் இருக்கும்போது கூறிக்கொண்ட அதே சுயம்பிரகாசம் அவர்கள், இப்போது இழுத்தவன் பின்னோடு போகிற போக்கில், காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சியிலே சேருகிறாரே, இப்படிப்பட்டவரை ஆதரித்துப் பலனுமில்லை, ஆதரிப்பது நியாயமுமல்ல, நாம நமது கழகத்துப் பட்சிராஜனைத்தான் ஆதரிக்க வேண்டும் என்று 8270வாக்காளர்களுக்குத் தோன்றியிருக்கிறது; இத்தனை தொல்லை எதற்கு, ஐயங்கார் ஸ்வாமிகளை ஆதரித்துவிட்டுப் போவோம், அவர்தான் காங்கிரசை ஒழித்துக்கட்டக் கூடியவர் என்ற எண்ணம் 1047-வாக்காளர்களுக்குத் தோன்றியிருக்கிறது; காங்கிரஸ் சர்வாதிகாரத்தை முறியடிக்க, மற்றவர்களை ஆதரித்தால் பயன் இல்லை; சம்மட்டிகொண்டு அடிக்க வேண்டும்; சரியான ஆசாமி இதற்கு, கம்யூனிஸ்டுதான், ஆகவே, அவருக்குத்தான் ஓட்டு அளிக்க வேண்டும் என்ற எண்ணம் 4096-வாக்காளர்களுக்குத் தோன்றியிருக்கிறது!

மொத்தத்திலோ 26138-வாக்காளர்களுக்கு, காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்ற எண்ணம்.

இதேபோலப் பல தொகுதிகளிலும், நிலைமை ஏற்பட்டுவிட்டது; மொத்தத்தில் காங்கிரசை எதிர்த்து வாக்காளர்கள் தீர்ப்பு அளித்திருக்கின்றனர்; ஆனால் தீர்ப்புச் சீட்டுகளை, பல்வேறு பெட்டிகளிலே பிரித்துப் பிரித்துப் போடவேண்டிய நிலைமை — மக்களால் கூட அல்ல— தலைவர்களால் ஏற்பட்டுவிட்டது.

அதனால்தான் தம்பி! மக்கள் பேரில் குறை கூறுவதற்கில்லை, குற்றம் 'தலைவர்கள்' பேரில்தான் என்று கூறினேன்.

நமது இராஜேந்திரன் தொகுதி தேனியைப்பாரேன். நாடகமாடி நாடாளலாமா என்ற தத்துவம் கக்கினார்களே சிலர், இரண்டிலும் திறமையற்றவர்கள், அவர்கள் எதிர்பார்க்கவில்லை, சென்னையில் பல ஆண்டுகளாக 'வாசம்' செய்துகொண்டுள்ள அந்த இளைஞன், தேனி தொகுதியில் பெற்றிருக்கும் செல்வாக்கின் அளவை. 31,404 வாக்குகளல்லவா, கிடைத்திருக்கிறது, "மணிமகுடத்துக்கு!!" காங்கிரசுக்குத்தான வெற்றி, ஆனால் வெற்றிபெற்றவருக்கு. விருது என்ன தெரியுமோ! இராஜேந்திரனைத் தோற்கடித்த தேனி தியாகராஜன்!! பார்த்தாயா, தம்பியின் சமர்த்தை! தியாகராஜனுக்கு, பத்மபூஷணம் பட்டம்போல், இப்போது இராஜேந்திரன் பெயர் பயன்படுகிறது!! இதே போலச் சென்னையில், கூட்ட விளம்பரச் சுவரொட்டி கண்டேன் — கேலிக்காக நானாக இட்டுக்கட்டிக்கொண்டு கூறினேன் என்று காங்கிரசார் யாராவது எண்ணிக்கொள்ளப்போகிறார்கள். 38,185 வாக்குகள் பெற்றார், தியாகராஜன்; காங்கிரஸ் வெற்றிபெற்றது; தேனி தேசியக் கோட்டை என்று பெருமைப்படட்டும்—வேண்டாமென்றுகூற, நாம், யார்.

ஆனால், தேனி தொகுதி மக்களின் தீர்ப்பு என்ன?

காங்கிரஸ் அபேட்சகருக்கு வெற்றி கிட்டிற்றே தவிர, 46712 மக்கள், காங்கிரஸ் கட்சி கூடாது, ஆகாது, என்றல்லவா தீர்ப்பளித்துள்ளனர். 38,185 வெற்றிபெற்றது! 46712 தோல்வியுற்றது!! காரணம், தெரிகிறதல்லவா?

31,404 வாக்காளர்கள் காங்கிரஸ் கூடாது, ஆகாது, என்ற தம்முடைய தீர்ப்பினை, இராஜேந்

திரன் மூலமாக, நாட்டுக்கு அறிவித்தார்கள்; 15,308 வாக்காளர்கள், காங்கிரஸ் கூடாது என்ற தீர்ப்பை, சீர்திருத்தக் கமிட்டி சார்பில் போட்டியிட்ட, அருணாசலம் என்பவர் மூலம், நாட்டுக்கு அறிவித்தனர்; மொத்தத்தில் காங்கிரஸ் கூடாது என்று தீர்ப்பளித்தவர் தொகை 46712!! நோட்டு கிழிக்கப்பட்டுப்போய் விட்டது! ஓட்டு சிதறிவிட்டது, காங்கிரஸ் வெற்றியைத் தட்டிப் பறித்துக்கொண்டது.

தேனீ, காங்கிரசுக்கா ஆதரவு காட்டியிருக்கிறது? இல்லையே!!

பல்வேறு தொகுதிகளிலே, காங்கிரசுக்கு இதே முறையிலே தான் வெற்றியைத் தட்டிப்பறித்துக்கொள்ள முடிந்திருக்கிறது!

கொடைக்கானல் தொகுதியில் கழகத் தோழர் குருசாமிக்குக் கிடைத்த 17452 வாக்குகளுடன், காங்கிரசை எதிர்த்த சுயேச்சை ஞானவரம் என்பவருக்குக் கிடைத்த 5365-வாக்குகளையும் கூட்டி, வெற்றி கிட்டியது என்ற நிலை பெற்ற காங்கிரஸ் அபேட்சகர் அளகிரிசாமியார் பெற்ற 21,107 வாக்குகளுடன் ஒப்பிட்டுப் பார், தவறு, மக்கள்மீது அல்ல, என்ற பாடம் கிடைக்கும்!

அரியலூரில், தம்பி, 31048 வாக்காளர்களை, 11,744 வாக்காளர்கள் தோற்கடித்திருக்கிறார்களே, தெரியுமா!!

காங்கிரஸ் கூடாது என்று 31,048 வாக்காளர்கள் தீர்ப்பளித்தனர். ஆனால், கழகத் தோழர் நாராயணனிடம் 10,404 ஓட்டுகள் மட்டுமே தந்தனர்; 6992 வாக்குகளை அப்துல்காதர் என்பாரிடமும், தனராஜ் என்பவரிடம் 4797 வாக்குகளும் மாணிக்கம் என்பவரிடம் 3069 வாக்குகளும், 2640 வாக்குகளை அரசன் என்பவரிடமும், 2154 வாக்குகளை தங்கவேலு என்பாரிடமும் தந்துள்ளனர்; கொடுத்தவரையில் கொடுங்கள் என்று 992 வாக்குகளை வடிவேலு என்பவர் பெற்றிருக்கிறார்.

இத்தனைபேரும், காங்கிரசை எதிர்த்து நின்றவர்கள்!

இவர்களில் ஒவ்வொருவருக்கும் ஓட்டு அளித்தபோது, வாக்காளர் எண்ணிக்கொண்டது, காங்கிரசை வீழ்த்த நமது 'ஓட்டு' பயன்படுகிறது என்பதுதான்! ஆனால் நடைபெற்றதோ, வாக்காளர்களில் மிகப் பெரும்பாலோர் விரும்பாதது, எதிர்பாராதது; 11,744 வாக்குகள் மட்டுமே பெற்று, காங்கிரஸ் அபேட்சகர் இராமலிங்கப் படையாச்சி என்பவர் வெற்றிக்கொடி நாட்டினார்—மூலைக்கு ஒருவராக நின்று கொண்டு, முழக்கமிட்டவர்களில், யாருக்கு வாக்களித்தால் காங்கிரசை ஒழித்துக்கட்டலாம் என்பதில் மக்கள் குழப்பமடைந்தனர்; ஓட்டுகள் பிளவுபட்டன; காங்கிரஸ் பிழைத்துக்கொண்டது!

அரியலூரில் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றார், ஆனால் அந்தத் தொகுதியில் காங்கிரசுக்குச் செல்வாக்கு என்று கூறிட முடியாது, எதிர்ப்பாளர்கள் 31,048; ஆதரவாளரின் தொகை 11,744 மட்டுமே!

தங்கவேலுவோ,வடிவேலுவோ, அரசனோ அப்துல்காதரோ, நாமேன் வீணாக ஓட்டுகளைப் பிரியச் செய்வது, கழகத்துக்குத்தான் கைகொடுப்போமே என்று மட்டும் எண்ணியிருந்திருப்பின், நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று பாரேன், தம்பி! 10404 வாக்குகளல்லவா பெற்றிருக்கிறார், நாராயணன் எனும் நமது கழகத்தோழர்! வெற்றி எக்காளமிட முடிகிறது காங்கிரசால்; பெற்ற வாக்குகளோ, 11,744 !!

பாபநாசம் தொகுதியிலும் இதே நிலைமை—காங்கிரசுக்கு ஆதரவாகக் கிடைத்த வாக்குகள் 38971—காங்கிரசை எதிர்த்து அளிக்கப்பட்ட வாக்குகள் 50761 !! ஆனால், இந்த எதிர்ப்பு ஓட்டுகள் ஐந்து பெட்டிகளில் பிரிந்து பிரிந்து விழுந்தன!

மதுராந்தகம் தொகுதியில் 57619 வாக்குகளை, காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் மூவர், பங்குபோட்டுக் கொண்டு தோற்றனர்; 24402 வாக்குகளைத் திரட்டி காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி தேடிக் கொள்ள முடிந்தது.

ஆலங்குடித் தொகுதியில் வெற்றி பெற்ற காங்கிரசுக்கு 28447 ஓட்டுகள்—காங்கிரசைத் தோற்கடிக்க 36686 வாக்காளர்கள் திரண்டனர், ஆனால் நமது கழகத் தோழர் சுப்பையா 18444 வாக்காளர்களையும், பாலகிருஷ்ணன் எனும் சுயேச்சையாளர் 18242 வாக்காளர்களையும் தத்தமது முகாமுக்கு அழைத்துச்சென்றனர்; தோல்வி தாக்கிற்று.

சூலூர் தொகுதியில்: காங்கிரசை வீழ்த்தவேண்டும் என்ற கடமை உணர்ச்சியில் 22777 வாக்காளர்கள் இருந்திருக்கின்றனர்—மூவர் பங்குபோட்டுக்கொண்டதால் 18328 வாக்குகள் பெற்ற காங்கிரஸ் காரிகை வெற்றி பெற்றார்.

கந்தர்வகோட்டைத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற முடிந்தது-ஆனால் தொகுதி எத்தகைய கோட்டை என்பதைப் புள்ளிவிவரத்தைப் பார்த்தபிறகு, காங்கிரஸ் நண்பர்களையே சொல்லச் சொல், தம்பி.

இராமச்சந்திர துரை	9839
தங்கமுத்து நாட்டார்	8553
மாரிமுத்து உடையார்	1638
தர்மராஜமேற்கொண்டார்	1115
இரங்கசாமி உடையார்	1051

ஆகமொத்தத்தில் 22196 வாக்குகள், காங்கிரசுக்கு எதிர்ப்பாக அளிக்கப்பட்டன! வெற்றிபெற்ற காங்கிரஸ் அபேட்சகர் கிருஷ்ணசாமி கோபாலருக்கு 18928 வாக்குகள் மட்டுமே தரப்பட்டன!!

தர்ம பிரபுக்கள்! இப்படி ஒருவருக் கொருவர் போட்டிபோட்டுக் கொண்டு, ஓட்டுகளை ஆளுக்குக் கொஞ்சமாகப், பங்கு போட்டுக் கொண்டிராவிட்டால், வெற்றியாவது நமக்குக் கிட்டுவதாவது, என்று உள்ளூர, **கும்மிடிபூண்டி** தொகுதியில் வெற்றி தேடிக் கொண்ட **கமலாம்புஜம்** அம்மையார் எண்ணாமலிருந்திருக்க முடியுமா, என்பதை, அந்தத் தொகுதியில் ஏற்பட்ட நிலைமையை ஆராய்ந்து பார்ப்பவர் நிச்சயம் அறிந்து கொள்வர்.

அங்கு ஐந்து அபேட்சகர்கள் காங்கிரசை எதிர்த்தனர்.

ஒவ்வொருவரும், காங்கிரசை வீழ்த்தக்கூடியவர்கள் என்ற நம்பிக்கையை, வாக்காளரிடம் பரப்பியதில், மக்கள் குழப்பமடைந்து, எந்த 'அம்பு' காங்கிரசை வீழ்த்தும் கூருள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடியாது போய் விட்டது.

வேணுகோபால் ரெட்டியார்	8908
துஷ்யந்தராஜா	7768
மாரிமுத்து	3998
P. B ஜீவரத்னம்	3152
கன்னையா நாயுடு	888

மொத்தம் கூட்டிப்பார்க்கும்போது கமலாம்புஜம் அம்மையாருக்கு கலக்கமாகத்தானே இருக்கும்! **24714 வாக்குகள், காங்கிரசுக்கு எதிர்ப்பாக!!** அம்மையாருக்குக் கிடைத்ததோ 9002!!

துஷ்யந்தராஜாவும் வேணுகோபாலரும், அல்லது மாரிமுத்துவும் துஷ்யந்தராஜாவும், நிலைமையைப்பரிசிலனை செய்து, தோழமை தேடி, காங்கிரசை வீழ்த்த நமக்குள் போட்டி இருக்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்துவிட்டிருந்தால்? எண்ணும்போதே, வெற்றி பெற்ற அம்மைக்கு முகம் எப்படி இருக்கும்?

வேணுகோபால ரெட்டியாரும் கன்னையா நாயுடுவும் தோழர்களாகி விட்டிருந்தால் கூட அல்லவா, ஆபத்து!!

பெட்டிகள் பல—அதன் பலன்' காங்கிரசுக்குத்தான்!

மதுரையில் கழகம் இத்துணை எழிலும் ஏற்றமும் பெற்றும், வெற்றி காங்கிரஸ் அபேட்சகருக்குக் கிடைத்ததே என்று நம்மில் பலர் திகைத்திடுகிறோம். உண்மை என்ன? **காங்கிரஸ் வெற்றிபெறவில்லை— காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி அடைந்திருக்கின்றார்!** வாக்காளர்களிலே பெரும்பாலோர் காங்கிரசுக்கு எதிர்ப்பாகத்தான் தீர்ப்பு அளித்தனர்—ஆனால் நாலு வெவ்வேறு பெட்டிகளில் அந்த எதிர்ப்பு ஓட்டுகள் பிரிந்து பிரிந்து விழுந்தன; காங்கிரஸ் அபேட்சகரின் பெட்டிக்கு 20,305 வாக்குகள் விழுந்தன—அவர் வெற்றி பெற்றார். 9872 வாக்குகள் நமது முத்துவுக்கும் பாகுலேயன் எனும் பிரஜா சோஷியலிஸ்டு 7873 வாக்குகளும் விசுவநாதன் எனும் கா. சி. க. 4565, முத்துமாலை என்பவர் 523 வாக்குகளும் பெற்று, காங்கிரஸ் அபேட்சகரை வெற்றிபெற வைத்துவிட்டனர்.

முசிரி தொகுதியில் நமது கழகத் தோழர் முத்துக்கருப்பன் 18657 வாக்குகள் பெற்றார்--முத்தையா எனும் காங்கிரஸ் அபேட்சகர் 34427 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்; அவ்வளவு செல்வாக்கா காங்கிரசுக்கு என்று மலைக்கத் தோன்றுகிறதல்லவா? விளக்கத்தைக் கண்டால், வேறோர் உண்மை புலனாகும். கா. சி. க. அபேட்சகர் 15936, கம்யூனிஸ்டு தோழர் 11543, சுயேச்சை 4206 வாக்குகள் பெற்றனர்—மொத்தத்தில் காங்கிரசுக்கு எதிர்ப்பாக 50342-வாக்குகள்!! எதிர்ப்பாளர் பலர்!! எனவே, காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற முடிந்தது.

தூத்துக்குடியிலும் இதே சேதி! சட்டசபை உறுப்பினராக முடியாதுபோய்விட்டதல்லவா நமது கழகத் தோழர் சிவசாமி அவர்களால்! பெற்ற வாக்குகள் 15298 —ஆனால் அவர்போல காங்கிரசை எதிர்த்து கம்யூனிஸ்டு முருகானந்தம் 14661 வாக்குகள் பெற்றார்—இருவருமாக, காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகளைப் பங்குபோட்டுக் கொண்டதால் 17438-வாக்குகள் பெற்ற காங்கிரஸ் அபேட்சகர் சட்டசபைக்கு வெற்றிவீரராக வருகிறார்.

தி. பழூர் தொகுதியில் நமது கழக அபேட்சகர் 15,602 வாக்குகள் பெற்றார்-காங்கிரஸ் எதிர்ப்பு வாக்குகளை கா. சி. க. தோழர் 7276 பிரித்துக்கொண்டார்— காங்கிரஸ் அபேட்சகர் 17,522 வாக்குகள் பெற்று, வாகை, எனக்கு என்றார்.

கடலூரில், 30135 வாக்குகள் காங்கிரசுக்கு எதிர்ப்பாக! ஆனால் அது அவ்வளவும் ஒரே பெட்டியில் இல்லை. நமது கழகத்து இளம்வழுதி 13091 பெற்றார், S. K. சம்பந்தம் 17044 பெற்றார்—காங்கிரசு அபேட்சகர் 21,100 வாக்குகள் பெற்று எம். எல். ஏ. ஆகிறார்!

ஆம்பூர் தொகுதியில், நமது கழகத் தோழர் சம்பங்கி, 25,105 வாக்குகள் பெற்றார்—25,562 வாக்குகள் காங்கிரஸ் அபேட்சகருக்குக் கிடைத்து, வெற்றி கிட்டிற்று — ஆனால், தம்பி! இந்த வேதனையைப்பார், காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகளில் 14592, ஒரு கா. சி. க. மடக்கிக்கொண்டார். ஆம்பூர் மக்கள்பேரில் குறை கூற என்ன இருக்கிறது? 39697 பேர் காங்கிரசு கூடாது, ஆகாது என்று தீர்ப்பு அளித்துத்தான் இருக்கிறார்கள்.

வடசென்னை காங்கிரசுக்கு எதிர்ப்புக் கோட்டை என்று எக்காளமிட்டு வந்தீர்களே, ஏன் உங்கள் ஜீவரத்தினம் தோற்றார் என்று காங்கிரசில் தரம் குறைந்த சிலர் கேட்கும்போது, எனக்கு **வேதனையாகத்தான் இருக்கிறது — தரம் குறையாத காங்கிரஸ்காரர்,** வெற்றிபெற்ற காங்கிரசார் 11,770 வாக்குகள் வாங்கினார் **என்பதையும் நமது ஜீவரத்தினம் 11,279-** வாக்குகள் பெற்றார் **என்பதையும்** அறிகின்றனர்--அகமகிழ்ச்சிக்கோ பெருமைக்கோ இடமில்லை என்பதை உணருகின்றனர்; **அது** கிடக்கட்டும் ஒருபுறம்; வடசென்னையில் **காங்கிரசுக் கட்சிக்குச்** செல்வாக்கு இருக்கிறதா? இதென்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி—**மாயாண்டிநாடார்** வெற்றிபெற்ற பிறகு, **உனக்கு** அந்தச் சந்தேகம் எழலாமா? என்று சிலர் கேட்பர். **மாயாண்டி** நாடார் எனும் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றார் **என்பதை** மறந்து பேசவில்லை; **அவர்** வெற்றிபெற்றார், **ஆனால் அது** காங்கிரசுக்கு வெற்றியாகுமா? காங்கிரசுக்கு எதிராக வடசென்னைத் தொகுதி குவித்துள்ள வாக்குகள் **28,143!! ஆதரவாகக்** கிடைத்தவை **11,770!! நால்வர்,** பங்கு போட்டுக் கொண்டனர், எதிர்ப்பு வாக்குகளை! **நோட்டு** துண்டாக்கப்பட்டுவிட்டது!!

இது போலப் பலப்பல தொகுதிகள்! **ஸ்ரீவில்லிபுத்தூரில்** காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகள் 57992—காங்கிரஸ் ஆதரிப்பு ஓட்டுகள் 49498!!

பென்னுகரத்தில், காங்கிரசுக்கு ஆதரவு அளித்தோர் 8791— எதிர்ப்பு தெரிவித்தோர் 19042!!

> ஒரு சமுதாயத்தின் சர்வ அதிகாரங்களையும் சேமித்து வைக்கிற இடம் பொதுமக்கள் தான். இந்த அதிகாரத்தை சரியானபடி உபயோகிக்க அவர்கள் போதிய பக்குவம் பெறவில்லை யென்றால், அந்தப் பக்குவம் பெறுவதற்காக அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டுமே யொழிய, அதிகாரங்களை அவர்களிடமிருந்து பறித்துக்கொண்டு விடக்கூடாது.
>
> —தாமஸ் ஜெப்பர்சன்.

மன்னார்குடியில் காங்கிரஸ் வெற்றி பெற விடமாட்டோம் என்று 31171 வாக்காளர்கள் தீர்ப்பளித்தனர்—பெட்டிகள் மூன்று—எனவே 25 ஆயிரம் வாக்குகள் பெற்றகாங்கிரஸ்அபேட்சகர் வெற்றியை அணைத்துக் கொண்டார்.

புள்ளி விவரங்களைப் பார்க்கப் பார்க்க, வேதனை தருவதாக மட்டுமல்ல, காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெற்றார்களே தவிர, காங்கிரஸ் கட்சி வெற்றி பெறவில்லை என்பது விளக்கமாகும்.

எதிர்ப்பாளர்களுக்குள்ளே இருந்துவந்த பிளவு, காங்கிரஸ் அபேட்சகர்களுக்குச் சாதகமாகி விட்டது; வேறென்ன.

இதுபோலெல்லாம் பிய்த்துப் பிய்த்துப் பார்த்திடலாமா, பத்து ஆண்டுகளாகஆதிக்கம் செலுத்தி வருவது போலவே, இனியும் காங்கிரஸ் கட்சிதானே ஆட்சி செய்யப் போகிறது! — என்று கேட்பார் உளர்.

ஆம்! அதிலே ஐயம் இல்லை! ஆனால் ஆதிக்கம் செலுத்தும் போது, இனிக் காங்கிரஸ் கட்சிக்கு உள்ளூர அச்சம் இருந்து வரும், என்பதை, காங்கிரசுக்கு எதிராகக் குவிந்துள்ள 'ஓட்டுகள்' காட்டுவதைக் கருத்துக்குருடரன்றி பிற யாரும் உணராமலிருக்கமுடியாது.

பத்து ஆண்டுகளாக ஆட்சி நடாத்தி வருகிற காங்கிரஸ் கட்சி, தன் சாதனைகளைப் பகட்டான முறையிலே விளம்பரப்படுத்திக் கொண்டும், பல்வேறு நாட்டுத் தலைவர்களை வாழ்த்தி வரவேற்று, 'ராஜோபசாரம்' நடாத்தி, தாஜ் மஹாலையும் அஜந்தாவையும் காட்டி, புலிவேட்டைக்கும் யானை மீது அம்பாரி அமைத்துச் சவாரி செய்யும் பவனிக்கும் ஏற்பாடு செய்துவைத்து, மாமல்லபுரத்துச் சிற்பங்களையும் மகாத்மாவின் சமாதியையும் காட்டி 'புகழுரைகளை'ப் பெறுவதிலும், ஈடில்லா ஆற்றலைக்காட்டி வருகிறது; அது மட்டுமின்றி இன்றளவு வரையில் நாட்டை மீட்டவர்கள், என்ற விருதுகாட்டி மக்களை மயக்கத்திலாழ்த்தி வைத்து வருகிறது; எனினும், காங்கிரசுக்கு எதிராக மக்கள் அளித்துள்ள ஓட்டுகள் காங்கிரசுக்கு ஆதரவாக உள்ளதைவிட அதிகம். ஜனநாயகத்தில், இந்தக் குறியை அலட்சியமாகக் கருதமாட்டார்கள்.

தம்பி! உன் உழைப்பின் பலனாக, நாலும் மற்றும் பதினைந்து நண்பர்களும் சட்டசபை செல்கிறோமல்லவா? அங்கு எவரெவரைக் காணப்போகிறோம், என்பதை எண்ணிப் பார்க்கும்போதே கழகத்துக்குக் கிடைத்த வெற்றி போலப் பத்து மடங்கு வெற்றி காங்கிரசுக்குக் கிடைத்திருப்பினும், அந்த வெற்றியைப் பெற, எத்தகைய விலை கொடுக்கப்பட்டது என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

ராஜாசர். முத்தைய்யா செட்டியார், 'கெம்பீரமாக' அமர்ந்திருக்கக் காண்பேன்—அவரும் நானும் சந்திக்கும்போது, என்னென்ன எண்ண அலைகள் எழும், இருவர் உள்ளங்களிலும்!

சர்தார் படேல் தமிழகத்தில் சுற்றுப்பயணம்செய்து, காங்கிரசுக்கு நிதி திரட்டினார் — தமிழர்கள் ஏமாளிகள், வடநாட்டுத் தலைவர்களிடம் பணத்தை இழந்துவிட்டுப் பல்லிளிக்கப்போகிறார்கள்—இதை நாம் தடுத்தாக வேண்டும் என்று, தீர்மானித்த ராஜா. சர். என்னை வரவழைத்து, படேலிடம் பணம் கொடுக்காதீர்கள் என்று மக்களைக் கேட்டுக்கொள்ள ஒரு அறிக்கை தயாரிக்கச் சொன்னார்—

படேல் வருகிறார்
பணப்பை ஜாக்ரதை!

என்ற தலைப்புடன், அந்த அறிக்கை தயாரானதும், ராஜா. சர். எவ்வளவு குதூகலமடைந்தார்! அவர், காங்கிரஸ்காரராக! நான் எதிர்க்கட்சியில்!! அன்றும் அவர் 'ராஜா!' இன்றும் அதே!! அன்றும் அவர் ஆளும் கட்சியிலே ஓர் உன்னத இடம் பெற்றிருந்தார்! இன்றும் அவருக்கு அதே அந்தஸ்து!! நான், காங்கிரஸ் ஆட்சியை, மக்களுக்கு உகந்ததல்லாதன செய்யும்போது கண்டித்துப் பேச முற்பட்டால், ராஜா. சர், 'காரசாரமாக' என்னைத் தாக்கக் கூடும்! காங்கிரஸ் கட்சியின் திட்டம் கவைக்கு உதவாது! அதன் போக்கு காட்டுத்தனமானது! என்று அன்று பேசினார் — இன்று கழகமாம் கழகம்—என்ன களகம், மகாகளகம் —என்று பேசுபவர்களின் நடுவில் அமர்ந்து ஒளிவிட இருக்கிறார்.

தம்பி! இந்தக் காட்சியைக் கொண்டு பார்க்கும்போது, கனதனவானின் வெற்றி என்று தலைப்பிடத் தோன்றுகிறதா, காங்கிரஸ் கட்சியின் வெற்றி என்று தலைப்பிடத் தோன்றுகிறதா, என்று, கருத்திலே சிறிதாவது நேர்மை உணர்ச்சியுள்ள காங்கிரஸ் அன்பர் இருந்தால் கேட்டுப்பாரேன்!!

காங்கிரஸ்கட்சி 150 இடங்களைப் பிடித்ததாக 'எக்காள'மிடுகிறார்களே, மக்கள் ஏதுமறியாதவர்கள் என்று எண்ணிக்கொண்டு, பிடித்த இடங்களில் அமர்ந்துள்ள பெரியவர்களின் இலட்சணம் என்ன என்று கூறிடச் சொல், கேட்போம்!!

அன்று போலவே அடையாறு அரண்மனை, அரசியலில், தனக்கென ஓர் தனிச் செல்வாக்கைத் தேடிக்கொள்ளும், சுவையையும் சூட்சமத்தையும் நிரம்பப் பெற்றிருப்பது இதிலிருந்து புரிகிறதே தவிர, காங்கிரஸ் கட்சியின் வெற்றியா, இதிலே மணம் வீசுகிறது!!

ராஜா. சர். காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தப்பட்டாரே, அந்தச் சம்பவத்தையே, காங்கிரசின் வெற்றி என்று கூறுவர், உண்மைக் காங்கிரஸ்காரர். "ராஜா. சர். அவாளோட யோக ஜாதகம அப்பேற்பட்டதாக்கும்!" என்றுதான் வாழ்த்தி இருப்பார்களே தவிர, காங்கிரஸ் கட்சியையா, பாராட்டியிருப்பார்கள்.

அடிபட்டவனும் அவதிப்பட்டவனும், 'தியாகி' என்ற பட்டம் மட்டும் பெற்று, வறுமைகொட்ட, வேலையில்லாத் திண்டாட்டம் வாட்ட கவனிப்பாரற்றுக் கசிந்து கண்ணீர் மல்கிக்கிடக்கின்றனர். இதோ கொலு வீற்றிருக்கிறார், கோடீஸ்வரர்!

அந்தப் 'பாவ'த்திலே, தம்பி, தெரிந்து அல்ல, தெளிவு இல்லாததால், தவறு செய்ய நேரிட்டுவிட்டதால், நமக்கும் பங்கு இருக்கிறது.

ராஜா. சர். இரண்டாயிரத்துச் சொச்சம் ஓட்டுகள் அதிகம் பெற்று, 'வெற்றி' பெற்றார்; அந்த இரண்டாயிரத்துச் சொச்சம் ஓட்டுகளை, நமது கழக அபேட்சகர்தான் மடக்கிக்கொண்டார்—

அந்த ஓட்டுகள் காங்கிரசை எதிர்த்து நின்றவருக்குப் போய்ச் சேர்ந்திருக்கும் — ராஜா, சர். தோற்றிருப்பார் — தவறு நம்முடையது, நமமுடையது என்று எண்ணும்போதெல்லாம், நான் வேதனை அடைகிறேன், மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளத் துடிக்கிறேன்.

இதுபோலப் பல தவறுகளைச் செய்துவிட்டோம்--போதிய அனுபவம் இல்லாததால்!!

இவைகளெல்லாம் சேர்ந்துதான், 150-இடங்களைக் காங்கிரஸ் கட்சிக்குப் பெற்றுத் தந்தனவே தவிர, மக்கள் தங்கள் ஆதரவைக் காங்கிரஸ் கட்சிக்கு, 'இதயபூர்வ'மாகத் தந்துவிடவில்லை.

பெற்ற வெற்றியின் தன்மையும் தரமும் ஒருபுறம் இருக்கட்டும்—தம்பி! காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றிருக்கிறார்களே, அவர்களிலே எத்தனை பேர்,

காங்கிரஸ்காரர்கள்
சத்யாக்கிரகிகள்
காந்தீயவாதிகள்
தியாகிகள்
பட்டம்பதவி விட்டவர்கள்
ஏழை பங்காளர்கள்

என்று கூறிடச் சொல்லு, கேட்போம்.

உண்மையிலேயே, 150 இடங்களிலே, 100 இடங்களுக்கு மேல், காங்கிரஸ் வெற்றிபெற்றதுஎன்று கூறுவதைவிட, தந்திரம் தெரிந்தோர் காங்கிரசைக் கைப்பற்றிக் கொண்டனர் என்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

இந்த வெற்றியைப் பெருமைக்குரியதாகக் கருதும், காங்கிரஸ்காரர்கள், சில ஆண்டுகள் கொடிகட்டி ஆளவும் அதன் பயனாக இலாப வேட்டை ஆடவும் வசதி கிடைத்தது என்பதற்காக வேண்டுமானால் குதூகலப்படலாமே தவிர, இது காங்கிரஸ் வெற்றி என்று எங்ஙனம் கூற முடியும்?

"அடா! அடா! இவ்வளவு எளிதாகக் காங்கிரசை வீழ்த்திட வழி இருக்கும் என்று தெரிந்திருந்தால், நான் மிகச் சிரமப்பட்டு, எதிர்ப்புறம் இருந்துகொண்டு காங்கிரசை வீழ்த்தப் பாடுபட்டிருக்கமாட்டேனே! தொட்டால் துவண்டுவிடும் இந்தத் தோகை மயிலாளுக்காக, நான் தோட்டத்துச் சுவருக்கல்லவா கன்னம் வைத்துக் கஷ்டப்பட்டேன்! என்றல்லவா, ராஜாசர்கள், பேசிப்பேசிச் சிரித்துக்கொண்டு கிடக்கிறார்கள்.

திடலில் கூட்டம்போட்டு, தீர்த்துக் கட்டிவிட்டோம் கழகத்தை என்று தீப்பொறி பறக்கப் பேசுகிறார்கள் காங்கிரஸ் பேச்சாளர்கள்; அதேபோது, மாளிகை பலவற்றிலே மந்தகாசத்துடன் சீமான்கள், காங்கிரஸ் கட்சியை எவ்வளவு எளிதாக ஏய்த்துவிட முடிந்தது என்றல்லவா, கூறிக் களிநடமாடுகிறார்கள்.

யாரார், எப்பாடுபட்டேனும், எவ்வளவு பணம் செலவிட்டேனும், என்னென்ன சூது சூழ்ச்சிகள் செய்தேனும், ஆளும் குழுவினராக அமர்ந்தால் மட்டுமே, ஆதிக்கமும் சுயநலமும் அழியாதிருக்கும் என்ற திட்டம் கொண்டவர்களோ — யாரார், மக்களாட்சியிலே தமது உடைமைகளுக்கும் சுரண்டும் தொழிலுக்கும் கேடு வந்துவிடுமோ என்று அச்சம் கொண்டு, அந்த ஆபத்து வராதிருக்க, மக்களாட்சியை வீழ்த்த வேண்டும் என்று எண்ணுபவர்களோ—அவர்களையே அழைத்து, ஆட்சி மன்றத்திலும், ஆட்சிக் குழுவிலும் இடம் தருவதாகக் கூறினால், கரும்பு தின்னவா கூலி கேட்பர்—தாராளமாகச் சேர்ந்திடலாயினர்-ஏராளமாகப் பணத்தை வீசினர் — வெற்றி கிட்டிற்று — காங்கிரசுக்கு அல்ல — கனவான்களின் கபட திட்டத்துக்கு!! எதிர்த்து அழிக்கமுடியாததை, அடுத்துக் கெடுத்திட முடிகிறது!!

பிடிபட்டால் தலைபோகுமே என்று கிலி கொள்பவனைப் பிடித்திழுத்து, தலையாரி தன் மருமகனாக்கிக் கொள்வது போலிருக்கிறதல்லவா!!

இம்முறையில் பெற்ற வெற்றிகள், காங்கிரஸ் கட்சிக்கும் ஊறுதான் தரும்—நாட்டுக்கும் நல்லது கிடைக்காது.

தம்பி! இந்தச் சூழ்நிலையில், நாம் 15 இடங்களைப் பெற்றோம்; 16 இலட்சம் வாக்குகள் மொத்தத்தில் கிடைத்தன, என்பது, அவ்வளவு அலட்சியமாகத் தள்ளிவிடக் கூடிய சம்பவமல்ல; ஏசிடுவோர்கூட புதியதோர் எழுச்சியைக் கண்ட மருட்சியால்தான், தமக்கும் தம்மை நம்பியுள்ள கடைசிப் பிரிவினருக்கும் **'தாஜா'** தேடிக்கொள்ளும்முறையில் தாறுமாறாகப் பேசி வருகின்றனர். நாடு மகிழ்கிறது; வரவேற்கிறது.

15-இடங்களில் வெற்றி பெற்றதற்காக, நமது கழகம் நடத்திய கடற்கரை கூட்டத்தையும் நான் கண்டேன் — 150-இடங்களில் வெற்றிபெற்ற காங்கிரஸ் கட்சி அதே கடற்கரையில் நடத்திய கூட்டத்தையும் காண நேரிட்டது. மக்கள் மிகமிக அறிவாளர், என்பதை நான் உணருகிறேன்!!

"அன்று கடற்கரைக் கூட்டத்தை ஒரு முறை சுற்றிப்பார்க்கலாமென்று சென்றேன் — பாதி வளையம் சென்றதும் மேலால் நடக்க முடியாமல், களைத்துப் போய் உட்கார்ந்துவிட்டேன்" என்று நண்பர் எஸ். எஸ். பி. லிங்கம் என்னிடம் சொன்னார்—காங்கிரஸ் வெற்றி விழாக் கூட்டத்தில், மேடைவரை, மிக எளிதாகச் சென்று, திரும்பி வந்த நிலையில்.

மக்கள் காட்டும் இந்தப் போக்குக்குக் காரணம் இல்லாமலில்லை.

"மகனே! வெந்நீர் தயாராகிவிட்டது, வா! குளித்துவிட்டு, சாப்பிட்டுவிட்டு, படுத்துத்தூங்கு. அப்போதுதான் களைப்பு போகும். கால்கடுப்பு நீங்கும்" என்று கனிவுடன் கூறி, தாய் மகனுக்கு அன்புடன் உபசாரம் செய்கிறாள், ஏழைக் குடிலில்.

அவன் இரண்டே ரூபாய்கள் தான், அன்று கொண்டுவந்தான்!

ஜனநாயகமானது ஏழையையும், பணக்காரனையும், பூதனையும், ஆரியனையும், அந்நியனையும், சுதேசியையும் போர்த்திக் கொண்டிருக்கிற மேலங்கியாகும், அதனை நாம் கிழித்துத் தூர எறிந்துவிட வேண்டாம். அப்படி எறிந்துவிட்டோமானால் அதனுடைய சம்ரட்சணை நமக்கு எப்பொது கிடைக்கும் என்பது தெரியாது,

—வெண்டல் விக்லி.

ஆனால், அதை அவன் தன் தாயிடம் கொடுக்கும்போது, அன்னை அடைந்த அகமகிழ்ச்சி அளவிட முடியாது.

மற்றோர் மனை! மாளிகை அல்ல, குடிலுமல்ல; வாடகை இடம், சிறிது வசீகரமானது.

"இதைக்கொண்டுபோய், அலமாரியில் வைத்துப் பூட்டு" என்று அலட்சியமாக ஒருவன், சிறு பேழையைத் தருகிறான் — விலையுயர்ந்த வைரமாலை இருக்கிறது, உள்ளே!

பேழையை வாங்கும்போதே, அந்தத் தாயின் கரம் நடுக்க மெடுக்கிறது, முகத்தில் பயக்குறி படருகிறது; பெருமூச்செறிகிறாள்.

"கதவைத் தாள்போட்டுவிட்டுப் போய்ப்படு...என்ன போறாத வேளையோ! என்ன தீம்புகொண்டு வரப்போகிறாயோ?" என்று கலக்கத்துடன் அந்த மாது பேசுகிறாள்.

காட்சிகள் தெரியட்டும் தம்பி! மீண்டும் படித்துப்பார்!!

இரண்டு ரூபாய் கொண்டுவந்த மகனிடம் அன்பு சொரியும்தாய்—வைரமாலை கொண்டு வரும் மகனிடம் வெறுப்பும் பயமும் காட்டும் அன்னை! காரணம் என்ன?

முன்னவன், சந்தைக் கடையில் மூட்டை சுமந்தான்- தம்பி! வெயிலில் பாடுபட்டான், வியர்வை கொட்டக் கொட்ட வேலை செய்தான் — அதற்குத் தரப்பட்ட கூலி, இரண்டு ரூபாய்!

நரம்பு முறிய வேலை செய்து, நாணயமான தொழில் செய்து, அவன் பெற்ற பணம், அன்னையின் கண்களிலே கனிவு கசிந்திடச் செய்கிறது.

மகனே! மகனே! மார்பு உடையப் பாடுபடுகிறாய், உன் மாதாவைக் காப்பாற்ற! சந்தைக் கடையிலே உன் தலைமீது, எவ்வளவு 'பாரம்' ஏற்றினார்களோ! கழுத்து சுளுக்கிக் கொண்டதோ, என்னவோ! எவ்வளவு சுற்றினாயோ! கால் எப்படிக் கடுக்கிறதோ! இவ்வளவு கடினமாக உழைத்துச் சம்பாதித்த பணமல்லவா இந்த இரண்டு ரூபாய்! மகனே! ஏழைக் குடும்பம்! நான் உன்னை மாளிகையிலா பெற்றெடுத்தேன்! படாத பாடுபடுகிறாய்! ஆனால், நாணயமாக வாழ்ந்து வருகிறாய்! அது போதுமடா, அப்பா! உன் உழைப்பு, நமது குடும்பத்துக்கு உயிரூட்டம் தருகிறது! உத்தமனடா நீ!—என்று, தாயின் கனிவான பார்வை பேசுகிறது.

இளவரசனுக்குக்கூட அந்த வரவேற்பும், உபசரிப்பும் கிடைக்காது-இரண்டே ரூபாய் கொண்டு வரும், கடமையை நிறைவேற்றிய மகனுக்கு அவ்வளவு கனிவுடன் உபசாரம் கிடைக்கிறது.

மற்றோர் மனையிலே, வைரமாலையைத் தருகிறானே, மகன்—அவன் தாய் ஏன் திகிலுற்றுப்போகிறாள்? அவனும் அங்காடி சென்றுதான் அந்த அரிய பொருளைக் கொண்டு வந்தான். காலையில் வெறுங்கையாகச் சென்றான், மாலையில் மாலையுடன் திரும்புகிறான்! தாய் திகிலடை .கிறாள்! காரணம் புரிகிறதல்லவா! தாய், உணருகிறாள், மகன் ஏமாந்தவனிடம், தட்டிப் பறித்துக்கொண்டு வந்திருக்கிறான், வைரமாலையை என்பதை; தலைக்குத் தீம்பு வருமே என்று அஞ்சுகிறாள்; மகனிடம் விவரம் கேட்டால் கோபிப்பான்; எனவே பெருமூச்செறிகிறாள்.

தட்டிப்பறிக்கப்பட்ட வைரமாலை—மூட்டை சுமந்ததால் கூலியாகக் கிடைத்த இரண்டு ரூபாய்!!

தூ! இரண்டே இரண்டு ரூபாய் தானா! அதோ அண்டை வீட்டுக் காரியின் மகன் இன்று வைரமாலை அல்லவா சம்பாதித்துக் கொண்டு வந்தான், என்று கூறிடும் தாயும் உண்டா?

வைரமாலை—ஒரே நாளில் என் மகன் சம்பாதித்தான்—பலே பேர்வழி—என்று புகழ்ந்து பேசத்தான், எந்தத் தாயாருக்காவது மனம் வருமா?

தம்பி! நாம் பெற்ற 15, சந்தை மேட்டில் மூட்டை சுமந்தவன் கொண்டுவந்து அன்னையிடம் தந்த இரண்டு ரூபாய்!!

அதனால்தான், நாடு நம்மைக் கனிவுடன் வாழ்த்துகிறது—வரவேற்கிறது—பாராட்டுகிறது.

வைரமாலையைத் தட்டிப் பறித்துக் கொண்டு வந்த மகனை, வாழ்த்தி வரவேற்க முடியாத நிலையில் தாய் இருப்பது போல, காங்கிரஸ்காரர்களாலேயே, 150-இடங்களில் பெற்ற வெற்றி பற்றி பெருமையாகவும் பூரிப்பாகவும் பேசமுடிவதில்லை!!

அண்ணன்,



"திருப்பதியில் உள்ள அர்ச்சகர்கள் பயிற்சி நிலையத்தில் அரிஜனங்களும் சேரத்தகுதி பெற்றவர்கள் என்று ஆந்திர அறநிலைய மந்திரி ஜி.வெங்கடரெட்டி நாயுடு, சட்டசபையில் மார்ச்சு 21-ந் தேதி அறிவித்தார். இந்த நிலையத்தில் சேர இதுவரை அரிஜனங்கள் யாரும் மனுச் செய்துகொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார்,"

*

சுதேசமித்திரன் வெளியிட்ட செய்தி இது! அர்ச்சகர்கள் 'பதவி'க்கு ஆதித்திராவிடப் பெருங்குடி மக்களும், செல்லலாம் என்கிறார் ஆந்திர அமைச்சர்!!

இங்கே, அறநிலையப் பொறுப்பில் ஒரு ஆதித்திராவிடரை அமைச்சராக்கினோம் என்று கூறி காமராஜருக்கு வாழ்த்துரைப்போர் உண்டு. அர்ச்சகர்களுக்கு வேதபாடங்களைக் கற்றுக்கொடுக்க, கோயிலுள்ள ஊர்களில் எல்லாம் வேதாகம பாடசாலைகள் உண்டு. அவைகளில், பார்ப்பனகுலத்தவருக்கு மட்டுமின்றி, அனைவருக்கும் இடம் பெற்றுத் தர முயற்சி செய்யுமா சென்னை அரசாங்கம்! அதோடு, யார்விரும்பினாலும் ஆண்டவன் சந்நிதிக்குப்போய், அர்ச்சனைசெய்து, தமது கையாலேயே ஆண்டவனுக்கு மலர் இறைத்துவிட்டு வரும் உரிமையையாவது வழங்குமா!!

அடிமை

"........நாதியற்றுச் சகதியிலே தள்ளப்பட்டிருக்கும் நீக்ரோக்கள் படும் அவதியைக் கண்டு என் நெஞ்சம் பொறுக்கவில்லை. அவர்களுக்கு விடுதலை கிடைக்க இந்த உயிர் மாத்திரமல்ல; என் பரம்பரையினர் அத்தனை பேருடைய உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராயிருக்கிறேன்!"

அடிமைகளுக்குப் பரிந்து போரிட்டான் என்ற குற்றத்திற்காகக் குற்றவாளிக்கூண்டிலே ஏற்றப்பட்ட **ஜான்பிரௌன்** கூறிய கடைசி வாக்குமூலம் இது. நீதிமன்றங்கள் நியாயத்தையும் மனித தர்மத்தையும் ஆராயும் பட்டிமன்றங்கள் அல்லவே? சட்டப்படி, கறுப்பர்களுக்குப் பரிந்து போர்செய்தது மன்னிக்க முடியாத குற்றம் என்று கூறி மரண தண்டனை அளித்தனர், மனித தர்மத்திற்காக உயிர்விடத் துணிந்த அந்த மாவீரனுக்கு! ஜான் பிரௌன் கல்லறைக்கு அனுப்பப்பட்டது 1859-ம் ஆண்டு, அக்டோபர் மாதம். ஆனால் ஆளும் வர்க்கத்தினர் ஜான்பிரௌனின் சவத்தைத்தான் பூமிக்கடியில் அனுப்பமுடிந்ததே தவிர, அவர் கொண்ட கொள்கையை நாட்டிலே பரவவிடாமல் தடுக்கமுடியவில்லை. மாறாக அவர் தியாகம் அறிவு படைத்தோரைச் சிந்தனையில் ஆழ்த்தியது. அடிமைகளைப் பார்க்கும்போதெல்லாம் அவர் கூறிய அறிவுரைகள் ஒவ்வொரு வெள்ளையன் உள்ளத்திலும் பிரதிபலித்தது, இரண்டு ஆண்டுகளுக்குள் அமெரிக்காவின் வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் உள்நாட்டுப் போரே ஆரம்பமாகியது. அந்தப் போரிலே வெற்றி கண்டு அடிமை வியாபாரத்தை அடியோடு ஒழிக்கும் மகத்தான், பணியைச் செய்து முடித்த பெருமை வரலாற்றில் பொன்னெழுத்துக்காளால் பொறிக்கப்படும் ஆபிரகாம்லிங்கனைச் சேர்ந்ததாகும்.

*

மனிதனை மனிதன் அடிமையாக்கி வியாபாரம் செய்வது என்ற பழக்கம் வரலாற்றின் ஆரம்பகாலத்திலே இருந்திருக்கிறது. எகிப்து, மெஸபடோமியா, சைனா முதலிய நாடுகளில் மக்களில் ஒரு பகுதி மற்றொரு பகுதிக்கு அடிமைகளாகவே இருந்திருக்கின்றனர். பெரும்பாலும் இந்த அடிமைகள் போரிலே தோற்ற கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர். ஆகவே ஒவ்வொரு நாட்டிலுமிருந்த அடிமைகள் பல்வேறு நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டவர்களாகவே இருப்பர். அந்தக் காலத்தில் அடிமைகள் அறிவாளிகளாகவும், பல நேரங்களில் எஜமானர்களை விடத் திடசாலிகளாகவும் கூட இருந்திருக்கின்றனர். கிரேக்க ரோம் சாம்ராஜ்யங்களின் எழில் மிக்க 'மங்கையர்களில் மிகப் பலர் அடிமைகள் தான்!

ப. வாணன்

கி. பி. மூன்றாவது நூற்றாண்டிலே ரோம் சாம்ராஜ்யம் சரிந்த நேரத்திலே, அத்தோடு இந்த 'அடிமை' முறையும் அழிந்து போயிற்று. ஐரோப்பாக் கண்டத்தில், வேகமாகப் பரவிவந்த கிறிஸ்துவ மதம் மனிதனை மனிதன் உடைமையாக்கும்இந்தத்தொழிலை அறவே எதிர்த்து ஒதுக்கியதும் அது ஒழிந்ததற்கு முக்கியமானதொரு காரணம். அதற்குப் பிறகு கிட்டத்தட்ட 12-நூற்றாண்டுகளுகு 'அடிமை' முறை நாகரீக உலகத்திலே இல்லாமலிருந்தது.

ஆனால் 15-ம் நூற்றாண்டிலே மிகப் பயங்கரமான முறையில் அது மறுபடியும் தோன்றியது.

ஐரோப்பிய நாகரீகத்தால் பாதிக்கப்படாமல், காட்டுமிராண்டிக்கால நாகரீகத்தோடு வாழ்ந்துவந்த ஆப்ரிக்காவின் மேற்குக் கடற்கரைவாசிகளான நீக்ரோக்களிடையில் 'அடிமை' முறை ஒழியவில்லை. ஆண்டாண்டுகளாக பரம்பரை பரம்பரையாக ஒரு குடும்பம் மற்றொரு குடும்பத்திற்கு அடிமையாகவே இருந்தது. ஆப்ரிக்காவின் மேற்குக் கடற்கரை நாலாயிரம்மைல் நீளம். இந்த நாலாயிரம் மைல்களிலுமிருந்த ஆயிரக்கணக்கான அரசர்களும், சிற்றரசர்களும் அவரவர்கள் திறமை தகுதிக்கேற்றவண்ணம் ஆயிரக்கணக்கில் அடிமைகளை வைத்திருந்தனர். போரிலே தோற்றவர்கள், குற்றம் புரிந்ததற்காகத் தண்டிக்கப்பட்டவர்கள்,மற்றப்படி சமுதாயத் தலைவர்களின் உத்தரவுக்கு மரியாதை செலுத்ாதவர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் அடிமைகளாக்கப்பட்டு, ஆடு,மாடுகளைப்போல் அடித்து, கட்டிவைக்கப்பட்டனர். அவர்களுக்கு வாழ்க்கை முறையோ ஒழுங்கு முறையோ எதுவும் கிடையாது. அவர்களை உடைமையாக்கி இருக்கும் எஜமானர்கள் கூறுவதையே கேட்கவேண்டும். ஒரு ஆண்டானிடமிருந்து மற்றொரு ஆண்டானுக்கு விற்கப்பட்டால், அங்குள்ள பழக்க வழக்கப்படி தன்னையும் மாற்றிக்கொள்ள வேண்டும்.

பதினைந்து பதினாறுவது நூற்றாண்டிலே அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியருக்கு அங்குள்ள காடுகளை அழித்து, நகரங்

கள் உண்டாக்கவும், தோட்டங்களையும், வயல்களையும் கண்காணிக்கவும் ஏராளமான கூலி ஆட்கள் தேவைப்பட்டது. ஆரம்பத்தில் அமெரிக்காவின்- ஆதிவாசிகளான "சிகப்பு இந்தியரை" இந்த வேலைகளுக்குப் பயன்படுத்தினர். சிகப்பு இந்தியர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததோடு, அவர்கள் ஐரோப்பியரின் ஆதிக்கத்தை ஒத்துக்கொள்ள மறுத்து, எதிர்த்துப் போர்செய்த வண்ணமிருந்தனர். இந்த நேரத்திலே, ஆப்ரிக்காவின் மேற்குக் கடற்கரைக்கு 'தங்கம்' தேடிச் சென்ற ஐரோப்பியர்கள், தங்கத்தைவிட அதிகலாபம் தரக்கூடிய அடிமை வியாபாரத்தைக் கண்டனர். அவ்வளவுதான். கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகள் ஆப்பிரிக்க அடிமைகள், ஆயிரக்கணக்கில், அமெரிக்காவுக்காக விலைக்கு வாங்கப்பட்டனர்.

ஆங்கிலேயர்கள் இந்த அடிமை வியாபாரத்தின் மூலம் கோடிக் கணக்கில் சம்பாதித்தனர். ஆப்ரிக்க அரசர்களும் தங்களுடைய இனத்தவர்கள் இப்படி, கண்டம் விட்டுக் கண்டம்மாற்றப்பட்டு நாயினும் கீழாய் நடத்தப்படுகின்றனரே என்று கவலைப்படவில்லை. பரம்பரையாக இருந்துவரும் பழக்கம்தானே என்றனர். புது ஆசாமி, வெள்ளையன் வந்து வியாபாரம் செய்வதால் இலாபம் கொழுத்த அளவில் வருகிறது என்று பரம திருப்தியோடு மக்களை வேட்டையாடி,அடிமைகளைத் தயார் செய்து கப்பலேற்றினர். கழுத்திலும், கையிலும் இரும்புச் சங்கிலிகளால் பூட்டப்பட்டு, நூறு பேர் தங்கக்கூடிய கப்பல் தளத்தில் ஆயிரம் பேர்கள் ஏற்றப்பட்டு அமெரிக்காவிற்கு நீக்ரோக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். போகிற வழியில் வெள்ளை எஜமானர்கள் மனது வைத்துச் சோறு போட்டால் தான் உண்டு. இல்லையேல் பல நாட்கள் பட்டினி. ஆண்கள் பெண்கள் என்ற வித்தியாசம் கிடையாது. எல்லோரும் பெரும்பாலும் அரை நிர்வாணக்கோலமாகவே கட்டிப்போட்டு வைக்கப்பட்டனர்.

தட்ப வெட்ப நிலைகள் அவர்களை வெகுவாகப் பாதித்தன. போகிற வழியில் உடல் நலிவு ஏற்பட்டால் மருத்துவ வசதி அவர்களுக்குக் கிடையாது. காய்ச்சல் ஆட்கொள்ளும்! இவ்வளவு ஆபத்தையும் தாண்டி உயிரோடு அமெரிக்கா போய்ச் சேர்ந்தால், மாட்டு மந்தைகளை அழைத்துப் போவதுபோல், நகரம் நகரமாக அமெரிக்கா பூராவும் இந்த அடிமைகள் நடத்தியே அழைத்துச் செல்லப்படுவர். ஒவ்வொரு ஊரிலும் அவர்களை ஏலம் விடுவர், அடிமை வியாபாரம் செய்யும் வெள்ளையர், வேலைக்கு ஆள் தேவைப்படுவோர் அவரவர் சக்திக்கும் தேவைக்கும் ஏற்றளவு அடிமைகளை விலைக்கு வாங்குவர். மாட்டின் கறவை அளவு பார்த்துத் தானே விலைக்கு வாங்குகிறோம். அதுபோல ஒவ்வொரு நீக்ரோவும் அவனவன் சரீர கட்டிற்கும், வயதுக்கும் ஏற்றவண்ணம் விலை பேசப்படுவான். மெலிந்து, கடும் வேலைகளுக்கு இலாயக்கற்ற நீக்ரோக்களை யாரும் வாங்கமாட்டார்கள். ஓரிரு ஊர்களில் ஏலம்விட்டுப் பார்த்துவிட்டு அப்படி விற்காமல் போகும் நீக்ரோக்களை மூன்றாவது ஊருக்குப் போகும் வழியில் கொன்று விடுவர், வெள்ளை வியாபாரிகள்!

நீக்ரோப் பெண்களுக்கும் அவரவர்கள் வயது, உடற்கட்டுக்கேற்ற வண்ணம் நல்ல விலை கிடைத்து வந்தது. ஆனால் கைக்குழந்தையோடு இருக்கும் பெண்ணை எஜமானர்கள் விரும்புவதில்லை. அதுவும் தென்பகுதியிலிருக்கும் பருத்தித்தோட்டங்களில் பஞ்செடுக்கும் பருவத்திலே இலட்சக் கணக்கான நீக்ரோப் பெண்ணடிமைகள் அமர்த்தப்பட்டனர். வேலை செய்யும் நேரங்களிலே குழந்தைகள் தொல்லை தரும் என்று குழந்தை வேறாக, தாய் வேறாகவே ஏலம் போட்டனர் அடிமை வியாபாரம் செய்தோர்!

இபபடி ஆப்ரிக்காக் கண்டத்திலிருந்து கட்டாயமாகக் கப்பலேற்றப்பட்ட நீக்ரோக்கள் சுமார் இருபது இலட்சமிருக்கும். அதில் அமெரிக்கா போய்ச் சேர்ந்து அடிமைகளாக விற்கப்பட்டவர்கள் 14 லட்சம் நீக்ரோக்கள், மீதி ஆறு லட்சம் பேர் போகிற வழியிலே அழிந்துபட்டவர்கள்!

மொத்தத்தில் மனிதன் மனிதனாக நடத்தப்படவில்லை; மிருகமாகக் கருதப்பட்டான். பரம்பரையாக அடிமையாக இருந்தகாரணத்தால் அறியாமையின் எல்லைக்குத் துரத்தப்பட்டிருந்தான், அவன். போராடவே அவனுக்கு உணர்வு இல்லை. அந்த வேலையையும் அறிவு படைத்த வெள்ளையரே செய்யவேண்டியிருந்தது!

ஆரம்பகாலத்திலிருந்தே அறிவுலகம் இந்த அடிமை வியாபாரத்தை ஒத்துக்கொள்ளவில்லை. பதினேழாவது நூற்றாண்டின் முடிவிலே ஐரோப்பாவில் ஒவ்வொரு பொதுமேடையிலும் அடிமை ஒழிப்புப் பற்றியே பேசப்பட்டது. 1685-ல் பிரஞ்சு அரசன் பதினான்காம் லூயி மன்னன், நீக்ரோக்களைக் கொடூரமாக நடத்துவதைத் தடுக்க 'கறுப்பர் சட்டம்' ஒன்றைப்போட்டான். "இது மாத்திரம்போதாது, மனிதனை மனிதன் வியாபாரம் செய்வதா?" என்று மனிதசமுதாயத்திற்கே சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் போதித்தபிரஞ்சுப் புரட்சிவீரர்கள் 1789-ல் அடிமை முறையை அறவே ஒழித்து சட்டம் இயற்றினர். இதைத் தொடர்ந்து பிரிட்டனில் 1807-ல் அடிமை வியாபாரம் செய்யக்கூடாது என்று சட்டம் இயற்றினர். நீக்ரோக்களின் சுதந்திரத்திற்குப் போராடிய ஆங்கிலேயர்களில் வில்லியம் வில்பர்போர்ஸ் மிக முக்கியமானவர்.

ஐரோப்பிய அரசாங்கங்கள் அடிமை முறையை நிராகரித்துவிட்டபோதிலும், அந்த முறை அனுஷ்டிக்கப்பட்டுவந்த அமெரிக்காவில், அதை ஒழிப்பதற்குக் கிட்டத்தட்ட நூறு ஆண்டுகள் போராடவேண்டியிருந்தது. அந்த நாட்டிலேதான் அடிமையின் உழைப்பிலே சொகுசான வாழ்க்கை நடத்தி வந்தனர் வெள்ளையர்கள். அமெரிக்காவின் தென்பகுதியிலிருந்த லட்சக்கணக்கான பருத்தித் தோட்டங்கள் நீக்ரோக்களின் வியர்வையிலேதான் வளர்க்கப்பட்டன, கையிலே சாட்டையை வைத்துக்கொண்டு குதிரைமேல் அமர்ந்த வண்ணமே தோட்டத்தைச் சுற்றிவருவார், வெள்ளை முதலாளி. பஞ்சு கொய்துகொண்டிருக்கும் அடிமை கைகால் வலி எடுத்துக் கொஞ்சம் நிமிர்ந்து நின்றால் பளீர் என்று சாட்டையாலடிப்பார். அடிபட்ட நீக்ரோவின் கண் குருடானாலும் சரி, அல்லது அடி வேகத்திலே அந்த இடத்திலே இறந்தாலும் சரி, அதைப்பற்றி வெள்ளை முதலாளிக்குக் கவலை இல்லை. அடிமை பிணமானால் கழுகுக்கு இரையா

விடப்படுவான்! மனதில் எந்த நேரத்திலும் பயத்துடன் இயந்திரம் போல வேலை செய்து வந்தனர் நீக்ரோக்கள். கோடி, கோடியாக டாலர்களைக் குவித்தது, அவர்கள் உழைப்பு. ஐரோப்பிய கண்டத்திலிருந்து அனாதையாக அமெரிக்கா சென்ற வெள்ளையர்கள் 18வது நூற்றாண்டின் ஆரம்பத்திற்குள் பெரும் பெரும் பணக்கார்ரர்களாகிவிட்டனர். இப்படி வாழ்க்கைத் தரத்தை உயரச் செய்த ஒரு சமுதாய அமைப்பை மாற்ற எந்த வெள்ளையனுக்குத் தான் மனம் வரும்?

அமெரிக்காவின் வடபகுதியில் பருத்தித் தோட்டங்கள் அதிகம் கிடையாது. ஆகவே நீக்ரோக்களின் எண்ணிக்கையும் குறைவு; அவர்களை அடித்து வேலைவாங்க வேண்டிய அவசியமுமில்லை, ஆகவே கொஞ்சம் தாராள மனது படைத்தவர்கள்கூட அடிமை முறை ஒழிய வேண்டியதுதான் என்று ஒத்துக்கொண்டனர். பொதுநல நோக்கம் கொண்டோர் 'நீக்ரோக்களுக்கு சுதந்திரம்' என்று வெளிப்படையாகப்பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தனர்.

"வடக்கே இருப்பவர்களுக்கு இலாபமில்லை; ஆகவே அடிமை கூடாது என்கின்றனர்! தூங்கிக் கொண்டிருக்கும் நீக்ரோக்களை இவர்கள் ஏன் எழுப்புகிறார்கள்?" என்று கோபமாகக் கேட்டனர் தெற்கே இருந்த வெள்ளையர்கள்.

இந்த விவாதம் நடந்துகொண்டிருக்கும் போதுதான் மனித சமுதாயத்திற்கு மகத்தான படிப்பினை தரும் "டாமின் இருப்பிடம்" (Uncle Tom's Cabin) என்ற உயர்ந்த நாவலை எழுதினார் ஹாரி பீச்சர் ஸ்டோவி அம்மையார். கார்ல் மார்க்ஸின் "மூலதனம்" என்ற நூலுக்கு அடுத்தபடியாக, மனித சமுதாயத்திலே மாபெரும் புரட்சியைச் செய்த ஒரே புத்தகம் இது ஒன்றுதான். இதுவரையில் எழுதப்பட்ட நாவல் எதுவும் இந்தளவு மகத்தான சாதனையைச் செய்ததில்லை.

நீக்ரோக்களின் அடிமை வாழ்க்கையையும்,அதில் அவர்கள் படும் அவதியையும் விவரித்து எழுதப்பட்ட"டாமின் இருப்பிடம்" 1852ம் ஆண்டு மார்ச்சு மாதம் வெளியிடப்பெற்றது. நவம்பர் முடிவதற்குள் ஒன்றரை லட்சம் பிரதிகள் விற்கப்பட்டன என்றால், அதன் பெருமையைஅதற்குமேல்விளக்கத் தேவையில்லை. சுமார் 500 பக்கங்கள் கொண்ட இந்நாவலின் ஒவ்வொரு பாத்திரமும் அன்றைய அமெரிக்காவிலிருந்த நீக்ரோ அடிமையையும் அவனை ஆட்டிப் படைத்த ஆண்டானின் குணாதிசயங்களையும் நன்கு விளக்கியது. அடுத்த ஆண்டிலே லண்டன்மாநகரத்திலே அந்நூல் பிரசுரிக்கப்பட்டபோது வாரமொன்றுக்கு பத்தாயிரம் பிரதிகள் செலவழிந்ததாம்! விரைவில் ஐரோப்பாவின் பல்வேறு மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டது "டாமின் இருப்பிடம்" இலக்கியச் சுவையறிந்தோர் அதை போற்றாத நாளில்லை; இடமில்லை. மனித சமுதாயத்தின் துயர்மிக்க சகாப்தத்தை விளக்கும் ஈடு இணையற்ற கற்பனை ஓவியம் என்று போற்றினர். புத்தகம் வெளியான பத்தாண்டுகளுக்குள் உலகத்தின் எந்தப் பாகத்திலும் அடிமைப்பட்ட நீக்ரோவின் விடுதலையைப்பற்றிப் பேசினார்கள். அப்படிப் பேசும்போது அவர்கள் கண்முன்னால் ஹாரி பீச்சர் அம்மையாரின் பாத்திரங்கள்தான் வந்து நின்றன!

நீக்ரோக்களின் வாழ்க்கையை வெள்ளையர்கள் எப்படி ஆட்டிப் படைக்கிறார்கள் என்பதை விளக்க பல நீக்ரோ அடிமைகளை நமக்கு அறிமுகப் படுத்துகிறார் ஹாரி பீச்சர்.

கடவுளுக்குப் பயந்து கண்ணும் கருத்துமாகத் தனக்குக் கொடுக்கப்பட்டவேலையைசெவ்வனேசெய்து வருகிறான் 'டாம்' என்ற நீக்ரோ. முதலாளியும் அவனை அன்போடு நடத்தி வருகிறான், இது அமெரிக்காவின் வடபகுதியில். ஆனால் இந்த வாழ்க்கை டாமுக்கு அதிக நாட்கள் நீடிக்கவில்லை. அவன் முதலாளி கடனாளியாகிறான். கடனைச்சரி செய்ய, டாமைத் தெற்கே இருந்துவந்த அடிமை வியாபாரம் செய்யும் ஒருவனிடம் விலை பேசி விற்றுவிடுகிறான். டாமை விலைக்கு வாங்கியவன் அவனைத் தென் பகுதியிலிருக்கும் பருத்தித் தோட்ட முதலாளி ஒருவனிடம் விற்கிறான். அங்கு அவனுக்குக் கிடைப்பதெல்லாம் சாட்டையடிதான். எவ்வளவுதான் உழைத்தாலும் திருப்தி கொள்ளாத எஜமானன், அவனுக்கு அரைவயிற்றுக் கஞ்சிகூட ஊற்ற மறுக்கிறான். சரியாக வேலை செய்யாத நீக்ரோப் பெண்களை சாட்டையாலடிக்க, டாமையே ஏவுகிறான். தன்னினத்தையே அடித்துத் துன்புறுத்த, தன்னை உபயோகிப்பதற்கு டாம் இணங்க மறுக்கிறான். அதற்குப் பரிசாக அவனுக்குக் கிடைத்த அடிகளைத் தாங்கமுடியாமல் உயிர் துறக்கிறான் டாம். சாகும்வரை ஒழுக்கம் தவறாமல் வாழ்ந்த டாம், சாகும் தருவாயில்கூட, தப்பித்து ஓட மறுத்துவிடுகிறான்! "நான் ஒருவன் தப்பினால் போதுமா?" என்று கூறி விடுதலைக்காக ஆண்டவனிடம் முறையிட்ட வண்ணம் இறக்கிறான். டாம் கடைசி வரை குடிப்பழக்கமில்லாதளவு பரிசுத்தவானாகவே இறக்கிறான். நீக்ரோக்கள் குடிகாரர்கள், ஒழுக்கமற்றவர்கள், முரடர்கள், காட்டுமிராண்டிகள் என்று அபாண்டவாதம் செய்பவர்களுக்குப் பதில் கூறுவதுபோல் இந்தப் பாத்திரத்தை உற்பத்தி செய்திருக்கிறார் ஹாரி பீச்சர். கதையிலே வெள்ளையர்கள் சுத்தவான்கள் என்று கூறிக்கொண்டு செய்யும் அக்கிரமத்தை நன்கு விளக்கியிருக்கிறார். லாப நோக்கம்கருதிக்கணவனையும் மனைவியையும், தாயையும் மகளையும், சிசுவையும் அதன் பெற்றோரையும் பிரித்து பிரித்துப் விற்கும் வெள்ளை முதலாளிகளையும், கதியற்றவர்கள் என்ற காரணத்தால் கன்னிப் பெண்களை இரக்கமற்ற முறையில் கற்பழித்த வெள்ளை முதலாளிகளையும் அம்பலப் படுத்துகிறார் ஹாரி பீச்சர்.

அடிமையின் வாழ்க்கை, நிலையில்லாதது. நல்ல முதலாளியிடம் இருக்கும்போது எளிய வாழ்க்கையாவது கிடைக்கும். அந்த முதலாளி கடன் பட்டாலோ இறந்து போனாலோ நீக்ரோவின் நிலைமை அடியோடு மாறும். அவனுடைய மனைவி அவனுக்கு மாத்திரம் சொந்தமானவளல்ல. ஆண்டானின் கேளிக்கைகளுக்கு அவள் எதிர் பேசுவது நரகத்திற்கு போவதற்கொப்பாகும். இப்படி நினைத்தும் பார்க்கமுடியாத துன்பத்தை அனுபவிக்கும் நீக்ரோக்களை உலகுக்கு எடுத்துக்காட்டுகிறார் ஹாரி பீச்சர்.

(அடுத்த இதழில் முடியும்)

★

உன் நாணயம் எங்கே தமிழா?

[கோவை சு. இளஞ்செழியன்]

——(.)——

பொன்னும், மணியும், புனுகும், அரிசியும்,
மின்னும் முத்தும், மிளகொடி லவங்கமும்,
பின்னும் உள்ள பீடுசேர் அகிலும்
இன்னடம் புரியும் இளமயிற் றோகையும்,
ஏலமும், கிராம்பும்; எழில்சேர் பட்டும்,
கோல மதக்கரிக் கூரிய தந்தமும்,
கலங்கல மாகக் கவினுற நிரப்பி,
நீலக் கடலிலே நீள்வழிச் சென்று,
கிரேக்கிலும், உரோமிலும், கீழ்க்கடல் நாட்டிலும்,
இராக்கிலும், எகிப்திலும், இலங்கைத் தீவிலும்,
விற்றுப் பெரும்பொருள் ஈட்டிய தமிழா!
சற்றுவுன் நிலையைச் சிந்தனை செய்திடு;
அன்றுநீ வெள்ளி என்றாய்; வராகன்
என்றாய்; பொற்பணம் இஃதே என்றாய்;
காசு என்றாய்; காண்டகு நாணயம்
ஈது என்றாய்; எங்கே அவையெலாம்
வெள்ளியும் பொன்னும் வேகமாய் மறைந்தன;
தள்ளிடப் பட்டன; தமிழ!நின் நாணயம்
அணு வந்தது; அதனுடன் ரூபாய்
கணுவென வந்தது; காசும் பணமும்;
வழக்கில் இருந்தன; வரம்பில் திறவோய்!
சழக்கர் செய்த சதியின் பயனால்
நய்யா பைசா நமக்கு வந்தபின்
ஐயோ காசும் அழிந்தது; பணமும்
போயது; தமிழரின் வாழ்வு தலைகீழ்
ஆயது; நாண யத்தில் தமிழ்ச்சொல்
அறவே யொழிந்தது; அருந்தமிழ் அழிந்தது;
பெறலரும் நாணயம் போயே விட்டது.

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
... அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.